Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 26 வெள்ளிக்கிழமை (12.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 073

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## செங்கோலுக்கு அவமரியாதை; மாகாணசபையில் நேற்றும் அமளிதுமளி

### தண்டனை வழங்கக் கோருகிறார் எதிர்க்கட்சித்தலைவர்



(யாழ்ப்பாணம்)

மாகாண சபையில் உள்ள செங்கோல் ஜனநாயகத்தின் சின்னம் மட்டுமல்லாமல் பாரம்பரியமும் உயர்பெறுமதி உடையதுமான பொருள் அதனை அவமரியாதை செய்வதோ அல்லது சேதப்படுத்துவதோ தண்டனைக்குரிய குற்றமாக கருதி கடந்த அமர்வில் செங்கோலுக்கு சேதம் ஏற்படுத்திய உறுப்பினருக்கு உரியதண்டனை வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர் சி. தவராசா கோரிக்கை விடுத்தார்.

கடந்த 04 ஆம் திகதி இடம்பெற்ற வட மாகாண சபையின் கூட்டத்தொடரில் தனது பிரேரணையை அவைத் தலைவர் எடுக்கவில்லையெனக் கூறி செங்கோலை தூக்கிவீசிய விடயம் சம்பந்தமாக நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற வட மாகாண சபையின் 20 ஆவது அமர்வின் கூட்டத் தொடரிலும் பலத்த வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் அவைத் தலைவர்சீ.வி. கே.சிவஞானம் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது . சபை ஆரம்பமாகியதும் உறுப்பினர்கள் சபையில் நடந்துகொள்ளும் முறை பற்றி மீண்டும் தெரிவிப்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கின் காணிப்பிரச்சினை வழக்கு போடுவதால் தீராது

(யாழ்ப்பாணம்)

காணி சுவீகரிப்பு தொடர்பில் அரசியல் ரீதியாகத்தான் தீர்வைப் பெறமுடியும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

காணி சுவீகரிப்பு தொடர்பாக வடமாகாண சபையில் இடம்பெற்ற விவாதத்தின்போது காணி அமைச்சர் என்ற ரீதியில் முதலமைச்சர் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாம் வலி.வடக்கு காணி பிரச்சினை தொடர்பில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான வழக்குகளை பதிவு செய்துள்ளோம். இதுவரையில் அதற்கு எந்த நன்மைகளும் எமக்கு கிடைக்கவில்லை வெறுமனே எமது மனக்குறைக்காகவும் ஆட்சேபனைக்காகவும் வழக்குகளை பதியலாம் ஆனால் நடைமுறையில் என்ன நடக்கின்றது என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

இது அரசியல் ரீதியான சில விடயங்கள் ஆகவே அரசியல் ரீதியாகத்தான் இதற்கு ஒரு தீர்வை நாங்கள் பெறவேண்டும்.

எங்களுடைய மன நிலையை வெளிப்படுத்துவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை ஆனால் அதனால்வரும் நன்

19 ஆம் பக்கம் பார்க்க

# கரணம் அடித்தார் கம்மன்பில

## மீண்டும் அரசு பக்கம் தாவல்



(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஏற்கனவே பங்காளிக் கட்சியாக செயற்பட்ட ஜாதிகஹெல உறுமயவின் பிரதிப்பொதுச் செயலாளரான உதயகம்மன்பில கடந்த மாதம் பொது வேட்பாளர் மைத்திரியின் பக்கம் சாய்ந்து செயற்பட ஆரம்பித்தார் எனினும் நேற்று முதல் திடீரென அவர் மீண்டும் அரசு பக்கம் தாவியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க தீர்மானித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பொருத்தமான அரசியல் நிலைப்பாடே வடக்கை அபிவிருத்தி செய்யும்



(யாழ்ப்பாணம்)

பொருத்தமான அரசியல் நிலைப்பாடுதான் எமது வடக்கின் சமூக பொருளாதார அபிவிருத்தியைப் பெற்றுத் தரும். என்றும் எமது மக்களின் கௌரவமான ஒளிமயமான எதிர்காலத்திற்கு இவ்வாறான அரசியல் நிலைப்பாடும் கொள்கைப் பற்றுறுதியும் மிகவும் முக்கியமானது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மனிதவள அபிவிருத்தி; இலங்கை முன்னணியில்

ஒரு நாட்டில் முன்னேற்றம் அதிகரிக்கும் போது பல்வேறு குற்றச்செயல்கள் அதிரிக்கும். எனினும் இலங்கையில் அந்நிலைமை படிப்படியாக குறைந்துள்ளது. 2009 மனித அபிவிருத்திச் சுட்டியில் 130ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2014 ஆம் ஆண்டில் 73ஆம் இடத்திற்கு வந்துள்ளது. இது மிகப்பெரிய முன்னேற்றம். உலக சனத்தொகையில் 30 வீதம் அலலது அதற்கு குறைந்த தொகையான சனத்தொகையே மனித் அபிவிருத்திச் சுட்டியில் உள்ளடக்கப்படுவர். அதில் நாமும்

19 ஆம் பக்கம் பார்க்க

## கீர்த்தி உடவத்த மைத்திரியின் பக்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தெஹிவளை அமைப்பாளரும் முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினருமான கீர்த்தி உடவத்த நேற்று இரவு கிருலப்பன பிரதேசத்தில் இடம்பெற்ற மைத்ரியின் பிரசார மேடையில் மைத்ரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக களம் இறங்கியுள்ளார்.


ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## மாகாணசபை உறுப்பினருக்கு மரண தண்டனை

ஐக்கிய தேசியக்கட்சியின் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினரான ஹசித முகாந்திரத்துக்கு மரணதண்டனை விதித்து, இரத்தினபுரி மேல் நீதிமன்றம், நேற்று தீர்ப்பளித்தது.

இருவரை தனது வாகனத்தினால் மோதி கொலை செய்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டதையடுத்து இவருக்கு இந்த தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.




இன்னும் 19 நாட்கள்

## அலைமோதும் ஆதரவாளர்கள்

எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின், முதலாவது பிர்சாரக் கூட்டம், அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்றது. இந்த பிரசாரக் கூட்டத்தின்போது ஆதரவாளர்களின் கூட்டம் அலைமோதியது.





## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

**ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித் தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680,
077 592 5088.

(C/3800)


## பிற்போடப்பட்டது கலாசார விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் இன்று அனலை தீவு ஐயனார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவிருந்த கலாசார விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என விழாக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# சனசமூக நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் விரைவில்

குருநகர் வெஸ்க்கி புதிய வீடமைப்புத் திட்ட வெஸ்க்கி சனசமூக நிலையத்துக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒன்றரை இலட்சம் ரூபா மற்றும் கடந்த 2002



ஆம் ஆண்டு இவ்வாறு ஒதுக் கீடு செய்யப்பட்ட ஒன்றரை இலட்சம் ரூபா உட்பட 3 இலட்சம் ரூபா செலவில் இந்த சனசமூக நிலையக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக முன்னாள் யாழ்.மாநகரசபை துணை முதல்வர் கனகராசா இளங்கோ (றீகன்) தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அத்திபாரம் போடப்பட்டு தூண்கள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மிகுதி வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தமது பகுதிக்கு சனசமூக நிலையம் ஒன்றை அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கித்தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அப்பகுதி மக்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்கள். (பா)


**தொலைக்காட்சித் துறையில் சாதிக்க வேண்டும் என கனவு காணும் திறமையுள்ள உங்களுக்கு**

ஓர் அரிய சந்தர்ப்பம்

DDTV யில் நீங்கள்

- செய்தி வாசிப்பாளராக ஆசைப்படுகிறீர்களா?
- நிகழ்ச்சித் தொகுப்பாளராக ஜொலிக்கவேண்டுமா?
- படத்தொகுப்புத் துறையில் கைதேர்ந்தவரா (Editor? (Adobe Premier CC, After Effect, 3 D Max/ Maya/ Cinema 4D)
- சிறந்த படப்பிடிப்பாளரா (Camera Man)?
- ஒப்பனைத்துறையில் முன் அனுபவமும் திறமையுமுள்ளவரா?
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவமும் வல்லமையும் மிக்கவரா?
- அலுவலகப் பணிகளில் ஆர்வம் மிக்கவரா?

(தகைமைகள் க.பொ.த சாதாரணதர சித்தி மற்றும் கணனிசார் அறிவு)

உங்கள் சுயவிபரக்கோவை, அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் எம்மைச் சந்தியுங்கள்

**காலம் : 13.12.2014 திகதி சனிக்கிழமை, முற்பகல் 10.00 மணி**

**இடம்: இல.50/57, 3 ஆம் மாடி, யாழ். மாநகரசபை கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(இ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## விவசாய பீடம் விரிவுரைகள் ஆரம்பம்

விவசாய பீடத்தின் எல்லா கல்வி ஆண்டிற்குமான விரிவுரைகள் எதிர்வரும் 15.12.2014 காலை 8.30 மணிக்கு விவசாய பீடம், அறிவியல் நகர், கிளிநொச்சியில் ஆரம்பமாகின்றது.

இறுதி ஆண்டு மாணவர்களுக்கான விடுதி வசதிகள் 14.12.2014 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணிக்கு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

09.12.2014 (C/3927) பதிவாளர்


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2588 திகதி 10-12-2014

ஆங்கில எழுத்து: J

வெற்றி எண்கள்: 29 54 57 61

போனஸ் இல: 65

ஜக்பொட் பரிசு ரூ. 22,182,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 220149 | 20/- | 4,402,980/- |
| 2 இல | 15789 | 100/- | 1,578,900/- |
| 3 இல | 332 | 1,000/- | 332,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8905 | 40/- | 356,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 659 | 1,000/- | 659,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 22,182,200/- | - |
| 1 இல + போனஸ் இல | 10533 | 100/- | 1,053,300/- |
| 2 இல + போனஸ் இல | 493 | 500/- | 246,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 435 | 200/- | 87,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 257326 | | 10,256,880/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.12.13 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு **ரூ. 22,783,900/-**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3919)


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | PROGRAM NAME |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | I.T.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | 'கோச்சடையான்' சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | 'பாட்ஷா' திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## கூட்டம்

(சண்டிலிப்பாய்)

வறட்சி அனர்த்தம் - பன்முகப்படுத்தப்பட்ட செயற்றிட்டம் தொடர்பான முக்கிய அபிவிருத்திக் கூட்டம் இன்று முற்பகல் 10.00 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொது அமைப்புக்களின் தலைவர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் (பதில்) சி.சி.மகேந்திரன் கேட்டுள்ளார்.

மேற்படி அபிவிருத்திக் கூட்டத்தில் வீட்டுக்கு வீடு கிராம செயற்றிட்டம் தொடர்பாகவும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளதால் இக்கூட்டத்திற்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (92)

# துர்நாற்றம் வீசும் மீன்சந்தை மல்லாவி வியாபாரிகள் விசனம்

(மல்லாவி)

மல்லாவி பொதுச்சந்தைப் பகுதியின் மீன்சந்தை துர்நாற்றம் வீசுவதாக வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக மீன் சந்தைப்பகுதியில் அதிகநீர் தேங்கி நிற்பதாகவும் அப்பகுதி சேறும் சகதியுமாக காணப்படுவதுடன் அங்கு விற்கப்படும் மீன் கழிவுகள் காலஞ்சென்று அகற்றப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுவதோடு அங்கு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பிரதேச சபை தவிசாளரிடம் வினாவியபோது, சந்தைக்கான கிணற்று நீரைப் பயன்படுத்தி தாம் இந்த சந்தையை துப்புரவு செய்துள்ளதுடன் கழிவுகளை அகற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மல்லாவி புதிய சந்தையை அடுத்தாண்டு ஜனவரிமாதம் திறக்க முயற்சித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (140)

# புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு புதிய உழவு இயந்திரம் கையளிப்பு




புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பயன்பாட்டுக்காக புதிய உழவு இயந்திரத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் கையளித்தார். குறித்த பிரதேச சபையின் கீழான கழிவகற்றல் செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் பொருட்டு உழவு இயந்திரம் பயன்படுத்தப்படவுள்ளது.

உழவு இயந்திரத்தின் சாவியை அமைச்சர் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுலோஜனா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் மிதிலைநாதன் ஆகியோரிடம் வழங்கி வைத்தார். இதனிடையே பிரதேச சபையின் தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்தும் கொண்டார். இதன் போது அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்) கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் ரவீந்திரநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

# பேராசிரியர் கைலாசபதியின் நினைவு தினமும், கலை விழாவும்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கைலாசபதி நினைவு தினமும் கலை நிகழ்வுகளும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் க.தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பாரதிகண்ட தொழில்நுட்பம் என்ற தலைப்பில் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சிவ.இராஜேந்திரன் சிறப்புரையையும், கைலாசபதியின் நூல்களான 'அடியும் முடியும்', 'கைலாசபதி முன்னுரைகள்' ஆகியவற்றின் நயவுரைகளை ஸ்ரீ லேக்கா பேரின்பகுமார், நி.ரஞ்சித்கண்ணா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.



இயக்கச்சி - நயினாக்காத்தான் குளத்தின் புனரமைப்பு பணிகள் தற்போது முடிவடையும் நிலையை அடைந்துள்ளதனை காணலாம். (90)

# ஐயா விவசாய அமைச்சரே!






வடமாகாணத்தில் விவசாயச் செய்கை எந்தப் பகுதிகளில் அதிகமாக செய்யப்படுகின்றது?

வடமாகாணத்தில் எந்தெந்த மாவட்டங்களில் நீர்ப்பாசனக் குளங்கள் அதிகமாக உள்ளன?

வடமாகாணத்தில் எந்தப் பகுதியில் கால்நடைகள் அதிகமாக உள்ளன?

கால்நடை வளர்ப்பும் மேய்ச்சல் நிலங்களும் எங்கே கூடுதலாக உண்டு?

வடமாகாணத்தில் எந்த மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கை சிறப்பாக செய்யப்படுகிறது?

இவைகளைப் பற்றி நீங்கள் கொஞ்சமாவது அறிந்திருப்பது நல்லது.

ஏனென்றால் இவ்வளவும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே வன்னிப் பிரதேசத்தில்தான் உள்ளன.

வன்னி மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள்.

வன்னியில் உள்ள முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களும் விவசாயத்தையே முழுமையாகக் கொண்ட மாவட்டங்கள்.

வன்னியில்தான் ஆயிரக்கணக்கான கால்நடைகள் உள்ளன.

நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் மாடு வளர்ப்பு செய்வோர் வன்னியிலேயே இருக்கிறார்கள்.

பட்டிக்கணக்கில் ஆடு வளர்க்கின்றவர்களும் வன்னியில்தான் உள்ளனர்.

இப்படியெல்லாம் இருக்கும்போது நீங்களோ கிளிநொச்சியிலிருந்த விவசாய அமைச்சை இரவோடு இரவாக யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறீர்கள்.

போதாக்குறைக்கு கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் அலுவலகத்தையும் உங்களுடைய கோடிப்புறத்துக்கு கொண்டு வந்து விட்டீர்கள்.

இதெல்லாம் எந்த வகையில் நியாயம்?

இப்படிச் செய்துகொண்டு நீங்கள் எப்படி விவசாயச் செய்கையில் மேம்பாட்டைக் காணப்போகின்றீர்கள்?

விவசாய அமைச்சும் விவசாய அமைச்சரும் விவசாயிகளோடு இருக்காமல் எப்படி விவசாயத்தை மேம்படுத்த முடியும்? எப்படி விவசாயிகளை முன்னேற்ற இயலும்?

விவசாயத்துறையை மேம்படுத்தும் அக்கறை உங்களுக்கு இருந்திருந்தால், வன்னியில் இயங்கிய விவசாய அமைச்சை எப்படி யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்திருப்பீர்கள்.

வன்னியில் இருக்கும் விவசாயிகளின் சம்மதத்தை இதற்குப் பெற்றீர்களா?

இதெல்லாம் உங்களுடைய வசதிக்கான தீர்மானமே தவிர, விவசாயிகளுடைய நலனுக்கோ விவசாயத்துறையின் மேம்பாட்டுக்கோ ஏற்புடையதல்ல.

ஆனால், வெளியே பேசும்போது தமிழ்த் தேசியப் பற்றுப் பொங்கிக் கொண்டு வரும் உங்களுக்கு.

உள்ளே பிரதேச வாத அழுக்கும் வெளியே தமிழ்த் தேசிய வெள்ளைப் பெயின்றுமாக உங்களுடைய வாழ்க்கை ஓடுகிறது.

என்ன செய்வது,

இப்படி நடிப்புச் சுதேசிகளின் காலமாக எங்கள் காலம் ஆகிப்போச்சு.

உங்களுடைய இந்த ஏமாற்றுக்கும் தந்திரத்துக்கும் சாயம் பூசுகிறமாதிரித்தான் நீங்கள் கார்த்திகை மாதத்தில் மரம் நடும் திட்டத்தை அறிமுகப்படுத்தினீர்கள்.

ஏனென்றால் கார்த்திகையில் மாவீரர்கள் நினைவைக் கொண்டாடுகிற மாதிரிக் காட்டிவிட்டால், பிறகு என்னமாதிரியும் கூத்தடிக்கலாம் என்று உங்களுக்குத் தெரியும்.

தமிழ்ச்சனங்கள் அந்தளவுக்கு ஏமாளிகள் என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறீர்கள்.

எத்தினை இயக்கங்களைச் சுழிச்சுக்கொண்டு விலத்தி மிதந்து வந்தனீங்கள்....

சும்மா சொல்லக்கூடாது நீங்கள் பலே கில்லாடிப் பேர்வழிதான்.

உற்சாகம்தான் மனிதனைத் தூண்டி வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. - ஹில்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ்ச்சூழலின் அறிவுமட்டம்?

"ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்று நாங்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை. கிராமம் கிராமமாகச் சென்று தமிழ் மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுவருகிறோம். அதன்படி மார்கழிமாதக் கடைசியில் எங்கள் முடிவை அறிவிப்போம்" என்று மாவை சேனாதிராஜா அவர்கள் கூறியுள்ளார்.

சேனாதிராஜா அவர்களை மக்கள் எந்தெந்தக் கிராமங்களில் பார்த்தார்கள் என்னென்ன கலந்துரையாடல்களை நடத்தினார்கள் என்று விசாரித்து சங்கடப்படுத்த வேண்டாம். அவர் கிராமங்கள்தோறும் நடந்து திரிகிறார் என்றே வைத்துக்கொள்வோம்.

தமிழ் மக்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள இப்போது தான் கிராமங்களுக்குச் செல்கிறார் என்றால்... தமிழ் மக்களின் விருப்பம் தெரியாமலா இவ்வளவு காலமும் தமிழ் மக்களுக்குத் தலைவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள்?

யாரை ஆதரித்தால் தமிழ்மக்களுக்கான தீர்வை எடுத்துத் தர முடியுமென்று தலைவர்களல்லவா அந்த இரு வேட்பாளர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தித் தீர்மானத்திற்கு வரவேண்டும்; அதை மக்களுக்குச் சொல்ல வேண்டும்!

மக்களுக்கு எது நல்லதென்று அரசியல் ராஜதந்திரத்துடன் முடிவெடுத்து மக்கள் தேவையை நிறைவேற்றிக் காட்டுவார்கள் என்றுதானே தலைவர்களைத் தெரிவுசெய்து அனுப்புகிறோம்! அவர்கள் வந்துநின்று "என்ன முடிவெடுப்பது சொல்லுங்கள்" என்று ஒவ்வொரு குடிமகனிடமும் கேட்டுக்கொண்டு நின்றால், அப்பாவித் தமிழன் என்ன செய்யமுடியும்?

நமக்கு வாய்த்த தலைவர்கள் நம்மைவிட விவரங் குறைந்தவர்களாக இருக்கிறார்களே... நம்மிடம் கேட்டுத்தான் எல்லா முடிவும் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்களே என்று தலையிலடித்துக் கொள்வதா? என்னவொரு சிறுபிள்ளைத்தனமான அரசியலுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது தமிழினம்!

மறுபக்கத்தில், தமிழரசு கட்சியின் ஊடகங்கள் எல்லாம் ஆட்சி மாற்றம் வேண்டும் மைத்திரி வெல்ல வேண்டும் என்று வரிந்து கட்டி எழுதிக்கொண்டுள்ளன; அதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்று வரும்போதுதான் மக்களைச் சாட்சிக்கு இழுக்கிறார் மாவை.

மைத்திரிக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுக்கொண்டால், அவருடனாவது பேசித் தீர்வைக் கொண்டுவருவார்களா தமிழ்க் கூட்டமைப்பினர் என்பதைச் சொல்லவேண்டி வந்துவிடுமல்லவா!

எனவேதான் "மகிந்தவும் சரியில்லை மைத்திரியும் சரியில்லை உலகில் ஒருத்தருமே சரியில்லை; தமிழ் மக்களே நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்..." என்று பந்தை மக்களிடம் தள்ளிவிட்டுப் பொறுப்பிலிருந்து நழுவப்பார்க்கிறது தமிழரசுத் தலைமை.

"யாரிடம் பேசியும் எங்களால் தீர்வை எடுக்க முடியாமலிருக்கிறது" என்று ஒரு தலைமையானது வெட்கங்கெட்டு வெளிப்படையாகச் சொன்னால், "அதுதானே சிங்களவனிட்டப் பின்னைத் தீர்வை எடுக்கேலுமே..." என்று ஒத்தூதும் ஊடகங்களே தமிழனுக்கு வாய்த்திருக்கின்றன!

அப்போ... இலங்கையில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி வந்து, அதன்பிறகு நாங்கள் அமெரிக்காவைப் பிடித்து அவருடன் பேசி, அதன்மூலம் தமிழருக்கான தீர்வை எடுக்கலாம் என்றா சொல்ல வருகிறார்கள்?

என்னதான் சூச்சுமம் வைத்திருக்கிறீர்கள் என்றாவது சொல்லித் தொலையுங்களேன்! இலங்கையில் வரும் ஆட்சியாளர்களும் எவரும் சரியில்லை.. இந்திய ஆட்சியாளர்களும் சரியில்லை.. நவிப்பிள்ளை அம்மாவுக்குப் பிறகு ஐ.நா.வும் சரியில்லை.. வேண்டாம் தலைசுத்துது!

எங்களுக்கான தீர்வை எடுப்பதற்கான எந்த அரசியல் கெட்டித்தனமும் எங்களிடம் இல்லை என்பதையே தமிழ்வீரமாகச் சொல்லித் தமிழ்த் தலைவர்களாகவும் இருந்துகொண்டிருக்கலாம் என்கிற அறிவுமட்டத்தில்தானா தமிழ்ச்சூழல் இருக்கிறது?

மார்கழிக் கடைசியில் யாருக்கு ஆதரவளிப்பது என்பதை அறிவித்துவிட்டு, ஜனவரி 1 இலிருந்து அகிம்சைப் போராட்டங்களைத் தொடங்கப்போகும் தமிழரசுத் தலைவரின் வியூகம் என்னவாக இருக்கும் என்று... நாளை பார்க்கலாம்... - *ஆசிரியர்*

# மானிய உரம் வழங்குவதில் வவுனியாவில் பாரபட்சம்

## விசனமடையும் விவசாயிகள்

(வவுனியா)

பெரும் போக நெற் செய்கைக்காக மானிய உரம் வழங்குவதில் வவுனியா கமநல சேவை நிலையம் பாரபட்சம் காட்டுவதாக வவுனியா ஆசிக்குளம் கிராமசேவையாளருக்கு உட்பட்ட கமக்கார அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது.

மேற்படி கிராம சேவையாளருக்கு உட்பட்ட கல்நாட்டியகுளம கோமரசன்குளம் ஆசிக்குளம் போன்ற கமக்கார அமைப்புக்களுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான பெரும் போகத்துக்கான மானிய உரம் ஆசிக்குளம் பகுதியில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை அன்று வழங்குவதாக கோவிற்குளம் கமநல சேவை நிலையத்தால் அறிவிக்கப்பட்டு குறித்த தினம் ஆசிக் குளம் பகுதிக்கு விவசாயிகள் சென்ற போது கமநல உத்தி யோகத்தர்களும் வந்திருந்த னர்.

கமநல சேவை நிலையத்துக்கு உரம் வழங்கப்பட்டிருக்கும் போது அப் பகுதிக்கு உட்படாத கல்லிக்குளம் பகுதியை சேர்ந்த 30 ஏக்கர் விவசாயத்தினை மேற்கொள்ளும் ஒருவர் உரத்துக்கான படிவத்தினை சமர்ப்பித்து அங்கு இருந்த அனைத்து உரத்தினையும் பெற்றுச்சென்று விட்டார்.

இந் நிலையில் நீண்ட நேரமாக வரிசையில் காத்திருந்த மக்கள் தமது பகுதிக்கு உட்படாத ஒருவருக்கு எவ்வாறு உரத்தை வழங்க முடியும் என வினாவிய போது உங்களுக்கு உரிய உரத்தினை நகரில் உள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுங்கள் என அங்கிருந்த கமநல உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் நகர் பகுதிக்குச் சென்ற மக்கள் கோவில்குளம் கமநல உத்தியோத்தருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியும் தங்கள் எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ் கிராம மக்களுக்கு ஒரு நியாயம்? பெரும்பான்மை இனத்தவருக்கு இன்னொரு நீதியா என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி கேட்கின்றனர்.

# விலைபோகாத மக்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றில் உருவாக்க வேண்டும்

## ஜே.வி.பி.யின் நோக்கம் அதுவே

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு அப்பால் சென்று, ஊழலுக்கும், பணத்திற்கும் விலைபோகும் மக்கள் பிரதிநிதிகளற்ற நாடாளுமன்றத்தை உருவாக்குவதே தமது நோக்கம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகே, கையேடுகளை விநியோகிக்கும் திட்டமொன்றை ஆரம்பித்து உரையாற்றிய முன்னணியின் தலைவர் இதனைக் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது தற்போதைய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் விரிவான திட்டமொன்றை மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பித்துள்ளதாக இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் பொதுத் தேர்தலின்போது அதிகளவு உறுப்பினர்களை வெற்றிகொள்ளும் வகையிலேயே தமது தேர்தல் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமூக பரிமாற்றத்தை உருவாக்குவதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# மொத்த வியாபாரிகளுக்கு விற்கப்படும் பொன்னிச்சம்பா

## மன்னார் ச.தொ.ச.வில் இந்தநிலை

(மன்னார்)

மன்னாரில் அமைந்துள்ள 'லங்கா சதொச' விற்பனை நிலையத்தில் மலிவு விலையில் விற்கப்பட வேண்டிய பொன்னிச்சம்பா அரிசி பதுக்கி வைக்கப்பட்டு மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நுழைவாயிலில் 'லங்கா சதொச' விற்பனை நிலையம் அமைந்துள்ளது. மன்னாரில் உள்ள வர்த்தக நிலையங்களையும் பார்க்க இங்கு பொருட்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும். மன்னார் மக்கள் தமக்குத் தேவையான பொருட்களை சில்லறையாகவும் மொத்தமாகவும் இங்கு கொள்வனவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த ஒரு வராத்திற்கு மேலாக மன்னார் 'லங்கா சதொச' விற்பனை நிலையத்தில் மக்களுக்குத் தேவையான அளவுக்கு சில்லறையாக விற்பனை செய்யப்பட்டு வந்த பொன்னிச்சம்பா அரிசி தற்போது பதுக்கி வைக்கப்பட்டு வர்த்தகர்களுக்கு மொத்தமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் பல மூடை அரிசிகளை கொள்வனவு செய்து அதிகூடிய விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

ஒரு கிலோ பொன்னிச்சம்பா அரிசி 'சதொச' விற்பனை நிலையத்தில் 60 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

ஆனால் குறித்த அரிசி வெளியில் உள்ள வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ 85 ரூபாய முதல் 95 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை சுமார் 400 மூடைகள் பொன்னிச்சம்பா மன்னார் 'லங்கா சதொச' விற்பனை நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட போதும் குறித்த அரிசி மக்களுக்கு வழங்கப்படாது மொத்தமாக வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# என்ன செய்தது அரசாங்கம்? கேட்கிறது எதிர்க்கட்சி

(கொழும்பு)

அரசாங்கம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டு நாட்டிற்காக என்ன செய்தது என்று எதிர்க்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரின் பேச்சாளரான மங்கள சமரவீர இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரின் பேச்சாளர்களாக மங்கள சமரவீரவும் மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர் நேற்று நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் இவர்கள் இருவரும் நேற்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்தியிருந்தனர். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# சீன ட்ராகனும் இந்திய நகர்வுகளும்

**வே. அர்ச்சுணன்**

**சீன ட்ராகனின் இலங்கை மீதான பயணமானது இந்தியாவை ஆத்திரமடைய வைத்திருக்கின்ற போதிலும் இலங்கை தனது இராஜதந்திர அணுகுமுறைகள் ஊடாக வெட்டியோடப் பழகிவிட்டது என்றே சொல்ல வேண்டும். இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவல் இலங்கை மீது கடுமையான அழுத்தத்தை கொடுப்பார் என்று அரசியல் வட்டாரங்கள் எதிர்வு கூறியிருந்த போதிலும் அவர் கடுமையான போக்கை கடைப்பிடிக்காமல் இராஜதந்திர ரீதியாக சீனாவின் செயற்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் நிறுத்திக் கொண்டார். அதேவேளை இலங்கையுடன் இந்தியா ஒத்துழைத்து செயற்படும் என்றும் கடற்பிராந்தியத்தில் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துச் சென்றுள்ளார். இராஜதந்திர ரீதியில் இலங்கையின் உயர்வடைந்துள்ள இராஜதந்திர நடைமுறையை இது காட்டுகின்றது.**

இலங்கை தொடர்பில் சீனா, இந்தியா தமது அதிகாரங்களை நிலை நாட்ட போட்டியில் ஈடுபட்டு வரும் இந்த நேரத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கைக்கு வந்து செல்கின்ற விடயம் இந்தியாவை ஆத்திரம் கொள்ள வைத்துள்ளது.

சீனாவை வெட்டி ஓடவேண்டிய தேவை இந்தியாவிற்கு கனமாகவே உள்ளது. இதற்கான நகர்வுகளை இந்தியா அடிக்கடி மேற்கொள்கின்ற போதும் சீனாவும் ஏட்டிக்கு போட்டியாக இருந்து வருகின்றது.

இந்த நிலையில் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் "அஜித்டோவல்" அவசரமாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். அதாவது பிராந்திய நலன் தொடர்பான தனது கருத்தை தெட்டத் தெளிவாக இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளார்.

"வெளிநாட்டவரின் அநாவசியமான பிரசன்னங்கள் தவிர்க்கப்பட வேண்டியது எனவும் 1971இல் ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தப்படி இந்துசமுத்திர பிரதேசம் ஒரு சமாதானப் பிரதேசம் என்றும் இப் பிராந்தியத்தில் அந்நிய இராணுவப் பிரசன்னங்களுக்கு இடமளிக்கலாகாது" என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் "இந்தியா 5000 வருடமாக இப் பிராந்தியத்தில் பலம்மிக்க நாடாக இருந்து வருகின்றது ஆனால் எந்த ஒரு நாட்டுக்கும் ஆத்திரமூட்டும் செயலில் ஈடுபடவில்லை" எனவும் தனது நியாயத்தை இந்திய பாதுகாப்பு ஆலோசகர் "அஜித்டோவல்" வெளிப்படுத்தியுள்ளார்.

சீன ஜனாதிபதி "ஜி ஜின்பிங்" கடந்த செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் கொழும்புக்கு வருகை தருவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகவே சீனாவின் நீர்மூழ்கி ஒன்றும் பாரிய விநியோக போர்க் கப்பல் ஒன்றும் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்திருந்தன. சீன நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று இந்து சமுத்திர பிராந்திய நாடொன்றின் துறைமுகத்திற்கு மேற்கொண்ட முதலாவது வெளிப்படையான பயணம் இதுவாகும்.

இந்த விவகாரத்தை இந்தியா அவ்வளவு இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை. ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்னதாக, இலங்கை கடற்பரப்பில் சீன நீர்மூழ்கிகளின் நடமாட்டத்தை இந்தியக் கடற்படையின் சோனார் கருவிகள் கண்டுபிடித்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால் "அவ்வாறு எந்த நடமாட்டத்தையும் தாம் அவதானிக்கவில்லை" என்று ஒரே வார்த்தையில் கூறி முடித்திருந்தது இலங்கை கடற்படை, இருந்தபோதிலும் செப்ரெம்பர் மாதம் கொழும்பு துறைமுகத்தில் சீன நீர்மூழ்கி தரித்து நின்றதாக வந்த ஊடகச் செய்திகளை நிராகரிக்கவில்லை.

அதே வேளை எந்தக் கருத்தும் கூறாமல் அமைதி காத்தது. இந்த அமைதி கடற்படைத் தளபதி "வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா" புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் வாய் திறக்கும் வரையில்-சுமார் ஒரு மாதத்திற்கும் மேலாக நீடித்திருந்தது.

இதற்குப் பின்னர் இந்திய பாதுகாப்புச் செயலாளர் ஆர்.கே.மாத்தூர் தலைமையிலான உயர்மட்ட குழுவொன்று கொழும்பு வந்து அரசாங்கத்துடன் பேச்சு நடத்தியது. அதையடுத்து பாதுகாப்புச் செயலாளர் "கோத்தாபய ராஜபக்ஷ" புதுடெல்லிக்கு அழைக்கப்பட்டு பேச்சு நடத்தப்பட்டது.

இதன்போது எந்தவொரு சீன நீர்மூழ்கியும் இலங்கையில் தரித்து நிற்பதை இந்தியாவால் ஏற்றுக் கொள்ள முடியாதென்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவல் திட்டவட்டமாக தெரிவித்து இருந்தார் என்று இந்திய ஊடகங்கள் கூறுகின்றன.

அதையடுத்து ஐந்துநாள் பயணமாக புதுடெல்லிக்குச் சென்றிருந்த இலங்கை கடற்படைத் தளபதியிடமும் இது குறித்த இந்தியாவின் நிலைப்பாடு எடுத்துக் கூறப்பட்டது.

முதலாவது சீன நீர்மூழ்கி கடந்த செப்ரெம்பர் மாத முற்பகுதியில் கொழும்புக்கு வந்த விவகாரம் வெளிச்சத்திற்கு வந்து அது பற்றிய இந்தியாவின் அதிருப்தியும் கருத்தும் வெளியிடப்படுவதற்கு முன்னதாகவே தமது நீர்மூழ்கிகளின் அடுத்தடுத்த வருகைக்கான அனுமதியை இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெற்று விட்டது சீனா. ஒக்ரோபரிலும் நவம்பரிலும் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கு இலங்கை அரசாங்கம் கடந்த செப்ரெம்பர் மாதமே அனுமதி கொடுத்து விட்டது. இதற்குப் பின்னரே இந்தியாவின் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்தியா எதிர்த்தாலும் சீனாவிற்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்யும் தைரியம் இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கவில்லை ஏனென்றால் சீனாவிடம் இலங்கை மிகப் பெரியளவில் கடனை வாங்கி குவித்து இருக்கிறது. எல்லா விடயங்களிலும் சீனாவிடமே தங்கியிருக்க பழகிக் கொண்டது. அந்த நாட்டுடன் நெருக்கமான உறவையும் பேணிவருகிறது.

இந்தியாவின் அதிருப்தியை பொருட்படுத்தி சீன நீர்மூழ்கிகள் கொழும்பு வருவதற்கு வழங்கிய அனுமதியை இலங்கை அரசாங்கம் இரத்துச் செய்தால் சீனாவின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். எனவே இரண்டாவது சீன நீர்மூழ்கியின் வருகைக்கு இலங்கை அரசிடம் இருந்து எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை.

"கோத்தாபய ராஜபக்ஷவிடம்" புதுடெல்லியின் அதிருப்தி வெளியிடப்பட்ட பத்து நாட்களுக்குள் கடற்படைத் தளபதி புதுடெல்லியில் இருந்து திரும்பிய 24மணி நேரத்துக்குள்ளாகவே கொழும்புத் துறைமுகத்திற்குள் பிரவேசித்திருந்தது அடுத்த நீர்மூழ்கியான சங்சென்-2.

இது இராஜதந்திர வட்டாரங்களில் ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்தியது. இந்தியாவின் கருத்தையும் கவலையையும் புறக்கணித்து விட்டு அடுத்த சீன நீர்மூழ்கிக்கும் இலங்கை அனுமதியளித்தது இந்தியாவை அவமானப்படுத்தும் ஒரு செயலாகவே பார்க்கப்பட்டது.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேராவிடம் சீன நீர்மூழ்கி பற்றி கேள்வி எழுப்பிய போது அவர் "வந்தது அணுசக்தி நீர்மூழ்கியல்ல என்றும் அது டீசல் மற்றும் பற்றரியில் இயங்கும் நீர்மூழ்கியே" என்றும் கூறி சமாளித்தார். அத்துடன் இந்தியாவின் பாதுகாப்பு எமது பாதுகாப்பு, இந்தியாவின் பாதுகாப்பு விடயத்தில் சமரசத்திற்கு இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் கூறியிருந்தார்.

அந்த உறுதிமொழி ஒரு சில நாட்களுக்குள் மீறப்பட்டு விடும் என்று இந்திய தரப்பில் கொஞ்சமும் எதிர்பார்க்கப்பட்டிருக்கவில்லை. இப்போது இரண்டாவது சீன நீர்மூழ்கியும் கொழும்பில் தரித்து நின்று விட்டு திரும்பியிருக்கிறது.


முதல் முறை சீன நீர்மூழ்கி கொழும்பில் தரித்து நின்ற விவகாரம் ஊடகங்கள் மூலம் வெளிச்சத்திற்கு வந்ததையடுத்து சீன பாதுகாப்பு அமைச்சு அதனை ஒப்புக்கொண்டது. "சோமாலிய கடற்கொள்ளையருக்கு எதிராக ஏடன்வளைகுடாவில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சீன கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கச் செல்லும் வழியிலேயே "சொங்" என்ற நீர்மூழ்கி கொழும்பில் தரித்துச் சென்றதாக" குறிப்பிட்டிருந்தார் சீன பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர்.

சீன ட்ராகனின் இலங்கை மீதான பயணமானது இந்தியாவை ஆத்திரமடைய வைத்திருக்கின்ற போதிலும் இலங்கை தனது இராஜதந்திர அணுகுமுறைகள் ஊடாக வெட்டியோடப் பழகிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.


அதாவது இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவல் இலங்கை மீது கடுமையான அழுத்தத்தை கொடுப்பார் என்று அரசியல் வட்டாரங்கள் எதிர்வு கூறியிருந்த போதிலும் அவர் கடுமையான போக்கை கடைப்பிடிக்காமல் இராஜதந்திர ரீதியாக சீனாவின் செயற்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் நிறுத்திக் கொண்டார். அதே வேளை இலங்கையுடன் இந்தியா ஒத்துழைத்து செயற்படும் என்றும் கடற்பிராந்தியத்தில் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துச் சென்றுள்ளார்.

இவ்வாறு சீனாவையும் இந்தியாவையும் ஒரே நேரத்தில் கையாளுகின்ற இலங்கையின் இன்றைய நிலைமையானது, இராஜதந்திர ரீதியில் இலங்கையின் உயர்வடைந்துள்ள இராஜதந்திர நடைமுறையையே காட்டுகின்றது.

சீனாவையும் இந்தியாவையும் ஒரே நேரத்தில் வெட்டியோடப் பழகியுள்ள அதே வேளை நாட்டின் அபிவிருத்தித் தேவைகளையும் இரு நாடுகளிடமும் இருந்து தேவையானளவு இலங்கை பெற தனது இராஜதந்திர வல்லாண்மையை வளர்த்துள்ளது என்றே சொல்லலாம்.



## அமெரிக்க பிரஜைகளுக்கு எச்சரிக்கை குறிப்பு



இலங்கையில் தேர்தல் பரப்புரைக் காலத்தில், அமெரிக்க குடிமக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென அமெரிக்க இராஜாங்கத் திணைக்கம் எச்சரிக்கை குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி நடக்க வுள்ளது அரசியல் பரப்புரைப் பேரணிகள் வன்முறையாக மாறுவது வழக்கம்.

அமெரிக்க குடிமக்கள், வாக்களிப்பு நிலையங்கள், அரசியல் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இடையூறுகள் தொடர்பாக உள்ளூர் ஊடகங்களை அவதானிக்க வேண்டும் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கோரியுள்ளது.

# தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தேர்தல் அறிக்கையில் இல்லை

## பொதுவேட்பாளர் மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

தனது தேர்தல் அறிக்கையில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் எதுவும் உள்ளடக்கப்படமாட்டாது என எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் முதல் முறையாக ஊடகங்களின் ஆசிரியர்களை சந்தித்த போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை செயலிழக்கச் செய்தல், அவசரமான அரசியலமைப்பு மாற்றங்கள் உள்ளிட்ட, 100 நாள் திட்டத்துக்கே தேர்தல் அறிக்கையில் கவனம் செலுத்தப்படும்.

100 நாள் செயறறிட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும் அதன் பின்னர் அமையும் புதிய அரசாங்கம் தான், தமிழர் பிரச்சினை பற்றிய விவகாரங்களைக கவனிக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பொது எதிரணி பேச்சுக்களை நடாத்தியுள்ளது. ஆனால் அவர்களுடன் உடன்பாடு எதுவும் செய்து கொள்ளப்படவில்லை.

தேர்தல் பரப்புரைகளின் ஒரு பகுதியாக வடக்கிலும் பேரணிகளில் கலந்து கொள்வேன்.

அடுத்த வாரம் தேர்தல் அறிக்கை தயாராகி விடும். அதில்



தகவல் அறியும் உரிமைச் சட்டமும், ஊடக சுதந்திரமும் உள்ளடக்கப்படும்.

நிறைவேற்று அதிகார ஆட்சிமுறை ஒழிக்கப்பட்ட பின்னரும், அதிபராக பதவியைத் தொடர்வேன். ஆயுதப்படைகளின் தளபதியாக இருப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹஷான் திலகரத்ன ஜனாதிபதிக்கு ஆதரவு



(கொழும்பு)

முன்னாள் இலங்கை அணியின் கிரிக்கெட் வீரரும் ஐக்கிய தேசியக் கட்சியின் அவிசாவளைப் பிரதேச அமைப்பாளருமான ஹஷான் திலகரத்ன நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக அறிவிததுள்ளார்.

கொழும்பிலுள்ள இலங்கை மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர சந்திபபில வைத்து தனது முடிவை அவர் அறிவித்தார். இதில் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜயசூரியவும் கலந்து கொண்டார்.

# மேல் மாகாண சபை ஆட்சி எதிரணிக்குச் செல்லுமா?

## தடுக்கும் முயற்சியில் ஜனாதிபதி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வசம் உள்ள மேல் மாகாணசபையின் ஆட்சியை தக்கவைக்கும் முயற்சியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேரடியாக களம் இறங்கியுள்ளார்.

மேல் மாகாணசபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் ஒவ்வொருவராக எதிரணியின் பக்கம் சாயத் தொடங்கி யுள்ளதே ஜனாதிபதியின் இந்த முடிவிற்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமயவின் நிசாந்த சிறிவர்ணசிங்க மற்றும் களுத்துறை மாவட்ட உறுப்பினரான கீர்த்தி காரியவசம் ஆகியோர் மைத்திரிபாலவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், ஹிருணிகா பிறேமச்சந்திரவும் மைத்திரிபாலவின் பக்கம் சாய்ந்துள்ளதால், மேல் மாகாணசபையில் ஆளும்கட்சிக்குள் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது.

மேல் மாகாணசபைத் தேர்தலில், ஒரு இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்ற ஹிருணிகா, எதிரணிக்குத் தாவியது ஜனாதிபதியை அதிர்ச்சியடைய வைத்துள்ளது..



இந்த நிலையில் திருப்பதிக்குச் சென்றிருந்த, ஜனாதிபதி அங்கிருந்து நேற்று முன்தினம் காலை கொழும்பு திரும்பினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து அவர், நேராக அலரி மாளிகைக்குச் செல்லாமல், மேல் மாகாண முதல்வர் பிரசன்ன ரணதுங்கவின் கொழும்பு இல்லத்துக்குச் சென்று, மேல் மாகாணசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

மேல் மாகாணசபை உறுப்பினர்கள் எவரும் தமது பக்கத்தில் இருந்து செல்லாமல் தடுப்பதற்காக ஒவ்வொருவருடனும் தனித்தனியாக பேசி அவர்களின் ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளனர்.

மைத்திரிபாலவின் பக்கம் சாயலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்படும், பிரதி அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் மகளும், மாகாணசபை உறுப்பினருமான மால்சா குமாரதுங்கவும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# முகநூல் சமூக வலைத்தளங்களில் பொறுப்பற்ற முறையில் தகவல்கள்

## அமைச்சர் வாசு கவலை



(கொழும்பு)

முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்களினூடாக பொய்யான, பொறுப்பற்ற தகவல்கள் பரப்பப் படுகின்றன. இதனால் மோசமான நிலைமையே ஏற்படும். என்னைப் பற்றி தெரிவிக்கப்படும் செய்திகளை தூசளவேனும் நான் பொருட்படுத்தவில்லை என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஐ. ம. சு. மு. ஊடக மாநாட்டில் கருதது் தெரிவித்த அவர்,

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாவது உறுதியாகியுள்ளதால் எதிர்த் தரப்பின் பைத்தியம் உக்கிரமடைநதுள்ளது. இதனால் இணையத் தளங்கள் ஊடாக பொய்ப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.

“பேஸ்புக்” தகவல்களை மக்கள் நம்புவதில்லை. ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாவதை விரும்பாத சக்திகளே இவ்வாறு பொய்ப்பிரசாரம் செய்கின்றன.

மைத்திரிபாலவை விட சந்திரிகாவையும் ஐ. தே. க.வையுமே தோற்கடிக்க வேண்டும். மேலைத் தேயத்துக்கு தலைசாய்க்காது அணிசேரா கொள்கையுடன் ஐ.நா.வில் தைரியமாக பேசிய ஜனாதிபதியை இந்த சக்திகளால் தோற்கடிக்க முடியாது.

# தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 23,24 இல்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி 08 ஆம் திகதி நடைபெறவுள்ள 07 ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறும் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இதற்கிணங்க, எதிர்வரும் 12 ஆம் திகதி வாக்குச் சீட்டுக்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 15 ஆம் திகதி தபால் மூல வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இம் முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 17 அரசியல்




கட்சிகள் உட்பட 02 சுயேச்சைக் குழு உறுப்பினர்களுமாக 19 பேர் போட்டியிடுகின்றமை தெரிநததே.

இவ் வேட்பாளர்களின் பெயரகள் அடங்கிய விபரங்களை வர்த்தமானி மூலம் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வேட்பாளர்களின் சின்னங்களை வெளியிட்டது தேர்தல்கள் திணைக்களம்


(கொழும்பு)

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சின்னங்களை, தேர்தல்கள் செயலகம், வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள சின்னங்களே எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணி முதல் 4 மணிவரை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டுக்களில் அச்சடிக்கப்படும் என திணைக்களம் தெரிவித்ததுள்ளது.

17 அரசியல் கட்சிகள் மற்றும் 2 சுயேட்சைக் குழுக்களுக்கான சின்னங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் மஹிந்த ராஜபகஷ வெற்றிலை சின்னத்திலும் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அன்னம் சின்னத்திலும் போட்டி யிடுகின்றனர்.



ஜனசெத பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிடுகின்ற பத்தரமுல்ல சீலரத்ன தேரர் - டிரக்டர் சின்னத்திலும் ஐக்கிய சமாதான முன்னணியின் சார்பில் போட்டியிடும் இ.நி.மொஹமட் மில்பார் - வண்ணத்துப்பூச்சி சின்னத்திலும் ஜனநாயக தேசியக் கட்சியில் கட்டுகம்பல அப்புஹாமிலாகே பிரசன்ன பிரியங்கர - கார் சின்னத்திலும் இலங்கை தேசிய முன்னணியில் விமல் கீகனகே - கிரிக்கெட் மட்டை சின்னத்திலும் ஐக்கிய சோசலிஷ கட்சியில் சிறிதுங்க ஜயசூரிய - முச்சக்கரவண்டி சின்னத்திலும் போட்டியிடுகின்றனர்.

அத்துடன், ஒக்கொம வெஸியோ ஒக்கொம ரஜவரு அமைப் பில் எம்.பி.தெமிணி முல்ல - உண்டியல் சின்னம், சோசலிச சமத்துவக் கட்சியில் பாணி விஜேசிறிவர்தன - கத்திரிக்கோல் சின்னம். முன்னிலை சோஷலிஸ கட்சியில் துமிந்த நாகமுவ - லாம்பு சின்னம் சுயேட்சை வேட்பாளரான ஐ.எம்.இல்யாஸ் - இரட்டைக் கொடி சின்னம், பொல்கம்பல ராளகே சமிந்த அநுருத்த பொல் கம்பல - மூக்கு கண்ணாடி சின்னத்திலும் போட்டியிடுகின்றனர்.

எக்சத் லங்கா பொதுஜன கட்சியை சேர்ந்த ருவன்திலக்க பேதுரு ஆராச்சி கோப்பை சின்னம். நவ சிங்கள உறுமயவை சேர்ந்த சரத் மனமேந்திர வில், அம்பு சின்னம். நவ சமசமாஜ கட்சி வேட்பாளர் சுந்தரம் மகேந்திரன் மேசை சின்னம்.

சிறிலங்கா தொழிலாளர் கட்சி வேட்பாளர் அநுர லியனகே கங்காரு சின்னத்திலும் எமத தேசிய முன்னணியை சேர்ந்த நாமல் ராஜபக்ஷ தொலைபேசி சின்னத்திலும் எக்ஸத் லங்கா மகா மகா சபா வேட்பாளர் ஜயந்த குலதுங்க பேனா சின்னம் ஆகியவற்றில் போட்டியிடவுள்ளனர்.

# மனித உரிமைகள் தின சிறப்பு இறுவட்டு வெளியீடு

## 'காதலி மணமகளாக விற்கப்படுகின்றாள்'



(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்ட போது அத்தினத்தில் சிறப்பு வெளியீடான "காதலி மணமகளாக விற்கப்படுகிறாள்" வீடியோ பாடல் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பாடலை நெடுந்தீவு முகிலன் எழுதி இயக்கியுள்ளார்.

இதற்கான தயாரிப்பை சஞ்ஜீவன் தர்மா வழங்க இசையினை - சி.சுதர்சன் வழங்கியுள்ளார்.

பாடலுக்கான ஒளிப்பதிவை தர்மலிங்கம் பிரதாபனும் எடிட்டிங்கை - கந்தப்பு ஜெயந்தனும் மேற்கொள்ள பாடலை கோகுலன், அருள் தர்சன் பாடியுள்ளனர்.

பாடலின் காணொளியின் நடிகர்களாக யெராட் / றூபன் / தனுசா / விஸ்ணு / சிந்தர் / ஆகியோர் நடித்துமுள்ளனர்.

இவ் இறுவட்டு சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றுமுன்தினம் காலை நல்லூர் மந்திரிமனை முன்னால் வைத்து வெளியிடப்பட்டுள்ளது. (48)

# வாக்களித்தவர்களுக்கு செய்யாத உதவி

# உங்களின் இயலாமையையே காட்டுகிறது

## வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது தபால் மூல வாக்களிப்பின் மூலம் வாக்களித்த அரச ஊழியர்களின் வாக்குகளில் 96 சதவீதமான வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கே கிடைத்துள்ளது. அவ்வாறிருக்க அதிகாரிகள் சரியாக செயற்படுகிறார்கள் இல்லையென முதலமைச்சர் இங்கு குறை கூறுகின்றார் என வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, நேற்றுமுன்தினம் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், முதலமைச்சர் விக்னேஸ்வரனைப் பார்த்து கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,



மாகாண சபை அதிகாரிகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கும் மாகாண சபைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று முதலமைச்சர் கூறுகின்றார். திட்டங்களுக்குரிய நிதி அரசினால் நேரடியாகத் திட்டத்தை முகாமைப்படுத்துபவர்களுக்குக் கொடுக்கப்பட்டாலும் அவற்றை நெறிப்படுத்துகின்ற முழு அதிகாரமும் மாகாணசபைக்கேயுள்ளது.

உதாரணத்திற்கு இரணைமடு யாழ்.குடிநீர் வழங்கும் திட்டத்திற்குரிய நிதி மாகாண சபைக்கு வழங்கப்படமாட்டாது.

ஆனால் அதனை நெறிப்படுத்தும் உரிமை மாகாண சபைக்கே உள்ளது என்பதைக் காரண மாக்க் கொண்டே நீங்கள் அத்திட்டச் செயற்பாட்டினைத் தடுத்து வைத்திருக்கின்றீர்கள். அத்துடன் அவ்வாறான திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்ட வைத்தியசாலைக் கட்டடம், பாடசாலைக் கட்டடம் போன்றவற்றை நீங்களே சென்று திறந்தும் வைத் திருக்கிறீர்கள்.

ஆனால் இத்திட்டத்திற்கும் உங்களிற்கும் சம்பந்தம் இல்லை என இங்கு கூறுகின்றீர்கள் என வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

# களைபிடுங்கச் சென்றவரை தீண்டியது பாம்பு

(வரணி)

வரணி வடக்கு பகுதியில் தனது வயல் நிலத்திற்கு களை பிடுங்கச் சென்றவர் பாம்புக்கடிக்கு ஆளானார்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. பாம்புக்கடிக்கு இலக்கானவர் உடனடியாக வரணி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பாம்புக் கடிக்கு இலக்கானவர் வரணி வடக்கைச்சேர்ந்த பா.குணேஸ்வரன் ஆவார். (150)



யாழ்.போதனாவைத்தியசாலை, ஆரியகுளம் பகுதி வடிகாலூடாக வழிந்தோடும் வெள்ள நீர் கடலில் சேரும் யாழ்.துரையப்பா விளையாட்டரங்குப் பகுதிக்கு முன்பாகவுள்ள வடிகால் கனரக இயந்திரத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருவதனைக் காணலாம். (பா)

# முதியவர்களுக்கு அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

முதியோர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின் கீழ் இவ் ஆண்டில் இதுவரை 8934 முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாகாண சமூக சேவைகள் திணைக்களங்கள் மூலமாக முதியோர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வரும் முறை 2008 ஆம் ஆண்டில் மாற்றம் செய்யப்பட்டதுடன் சமூகசேவைகள் அமைச்சு தானே நேரடியாக பிரதேச செயலர்கள் மூலமாக வழங்கும் முறையை ஏற்படுத்தியது.

2008 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையும் அவ்விதமாக 200161 முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

முதியோர் அடையாள அட்டையை வைத்திருக்கும் ஒருவர் பொதுச் சேவைகளான வைத்தியசாலைகள், நீதிச் சேவைகள், வங்கிச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், அரச அலுவலகங்கள் போன்றவற்றில் முன்னுரிமை பெறமுடியும்

தற்போது முதியோர் அடையாள அட்டைகளை பிரதேச செயலகங்களிலுள்ள முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் அல்லது சமூக சேவைகள் அலுவலர் ஊடாக விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு பிரதேச செயலர்களின் ஒப்பத்துடன் ஓரிரு மணித்தியாலயங்களிலேயே பெறக் கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனை விட காலத்திற்குக் காலம் அமைச்சின் நடமாடும் சேவை, அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலமான நடமாடும் சேவைகள் மூலமாகவும் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்காக பிரதேச செயலர்களுக்கு அடையாள அட்டைகளும் லெமினேற்றிங் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## முரசின் இன்றைய பலன்

(12.12.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 26 ஆம் திகதி.
ஷஷ்டி / மரணயோகம்.
ஆயிலிய நட்சத்திரம் காலை 09.04 வரை. பின் மகம்.
இராகு காலம 10.50 - 12.20 வரை. சுபநேரம 06.20 - 07.50 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – தொழிலில் ஏற்பட்ட பிரச்சினை விலகும், மருத்துவரின் சிபார்சின்றி மருந்துகளை பாவிப்பது நன்மைதரும்.

**ரிஷபம்** – பொறுப்பின்றி உதவி செய்ய மனையாள் தடுத்தல், நிலுவை கூடிய தால் தொடர்புகள் பாதிக்கப்படல்.

**மிதுனம்** – சக ஊழியர்களுடன் சுமுக உறவினைப் பேணுதல், எதிர்பார்த்திருந்த நிலுவை வந்தடைதல்.

**கடகம்** – உதவி செய்யப்பின்னிற்றல், நோயகல தெய்வதலத்துக்கு செல்லல்.

**சிம்மம்** – வாய்ச்சாதுரியத்தினால் காரிய சித்தி ஏற்படல், சுப காரியமொன்று எதிர்பாராது ஏற்படல்.

**கன்னி** – விழாக்களில் தம்பதியர் சகிதம கலந்து கொள்ளல், இலாபம ஏற்படும், மகிழ்ச்சி அதிகரித்தல்.

**துலாம்** – வழுக்கி வீழ்ந்து துயரச்சம்பவம் இடம்பெறும், உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்** – புதியதொழில் தொடங்கதயக்க மேற்படல், மாமன் மாருடன் சுமுக உறிவைப்பேணுதல்.

**தனுசு** – பெற்றோரின் புத்திமதியைக் கேட்டு நடத்தல் நன்று, நட்பு வட்டாரம் விரிவடைதல்.

**மகரம்** – விவாகப்பேச்சு அனுகூலமடைதல், வேகக்கட்டுப்பாட்டினால் விபத்தைத் தவிர்த்தல்.

**கும்பம்** – வீண்வாக்குவாதங்களில் ஈடுபடாதிருங்கள், அனுமதி பெற பிரமுகர்களை அணுகுதல்.

**மீனம்** – சரியான திட்டமிடலால் மன அழுத்தம்குறைவடையும், துணிந்து நின்றதால் துயர் விலகிவிடல்.

# முல்லை நீராவிப்பிட்டி கிராமத்தில் விளையாட்டு மைதானம் வேண்டும்

## அமைச்சர் ரிஷாத்திடம் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட நீராவிப்பிட்டி கிராமத்தில் பொது விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துத் தருமாறு நீராவிப்பிட்டி நீரா யுத் கிளப் அணியினர் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடலொன்றுக்கு அமைச்சர் அண்மையில் விஜயம் செய்தபோது குறித்த இளைஞர் அணியினர் அமைச்சரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச இணைப்பாளர் ஏ.ஜி.சிப்ரி யின் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று, குமாரபுரம் உள்ளிட்ட கிராமங்களை உள்ளடக்கிய வகையில் பொது நூலகமொன்றும் சனசமூக நிலையங்களுக்கான நிரந்தரக் கட்டடங்களும் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் யுத் அணியினர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதன்போது அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கருத்துத் தெரிவிக்கையில், போரினால் அழிவடைந்த முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதியுதவிகளை ஒதுக்கீடு செய்துள்ளேன். எதிர்காலத்தில் விளையாட்டுத் துறையிலும் எமது இளைஞர், யுவதிகள் பிரகாசிக்கும் வகையில் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட அத்தனை தேவைகளையும் நிறைவேற்றிக்கொடுப்பதற்கு முயற்சி எடுப்பேன் என்றார்.

# தடை நீக்கம்



(கொழும்பு)

இலங்கையின் சுழல்பந்து வீச்சாளர் சச்சித்ர சேனாநாயக்க, நியூசிலாந்தின் சுழல்பந்துவீச்சாளர் கேன் வில்லியம்ஸன் ஆகிய இருவரும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீசுவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) அனுமதித்துள்ளது.


மீண்டும் பந்துவீச அனுமதி கிடைத்தமை குறித்து சச்சித்ரதெரிவிக்கையில், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் மீண்டும் விளையாட அனுமதி கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகின்றேன்.

ஆறு மாதங்களாக தேசிய அணியில் இடம்பெறாமல் இருந்தமை மனதுக்கு சற்று சங்கடமாகத்தான் இருந்தது. இந்த ஆறு மாத காலத்தில் எனது பந்துவீச்சுப்பாணியை சீரமைப்பதற்கு நான் எடுத்த முயற்சியின் பலனாக எனக்கு மீண்டும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் என்னால் இயன்ற அதிகபட்ச பங்களிப்பினை இலங்கை அணிக்கு வழங்குவேன் என்றார்.

**விளையாட்டு செய்திகள்**

# அடிலெய்ட்டில் பதிலடி கொடுக்கிறது இந்தியா

## ஹோலி சதம்; புஜாரா, ரஹானே, முரளி விஜய் அரைச்சதம்



அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி சிறப்பாக ஆடிவருதுடன் ஓட்டங்களையும் குவித்து வருகின்றது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட்டில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி டேவிட் வோர்னர், ஸ்ரீபன் ஸ்மித், கப்டன் கிளார்க் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 517 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கப்டன் கிளார்க் 128, ஸ்ரீபன் ஸ்மித் 231 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழக்காது 162, டேவிட் வோர்னர் 145, எம். மார்ஷ் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கே.வி. சர்மா, மொகமட் சமி, அரோன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி முதல் விக்கெட்டை விரைவாக இழந்தபோதிலும் பின்னர் சுதாகரித்துக் கொண்டதுடன் ஓட்டங்களை வேகமாகக் குறித்தது. குறிப்பாக கப்டன் ஹோலி பொறுப்புடன் ஆடி சதம் விளாசியதுடன் ரஹானே, புஜாரா, முரளி விஜய் ஆகியோரும் சிறப்பாக ஆடி அரைச் சதம் கடந்தனர். இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் கப்டன் ஹோலி 184 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள் அடங்கலாக 115 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். டெஸ்ட் அரங்கில் ஏழாவது சதத்தை ஹோலி பதிவு செய்தார். அத்துடன் கப்டனாக நியமிக்கப்பட்ட முதல் போட்டியிலேயே சதம் விளாசி கிரிக்கெட் வல்லுநர்களின் பாராட்டைப் பெற்றார். மற்றும் புஜாரா 73, ரஹானே 62, முரளி விஜய் 53 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது ரோகித் சர்மா 33 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் ஜோன்சன், நதன் லயன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஐந்து விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இந்திய அணி 148 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# மும்பை இந்தியன்ஸ் பயிற்றுநராக பொண்டிங்



மும்பை இந்தியன்ஸ் அணியின் பிரதான பயிற்றுவிப்பாளராக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் நியமிக்கப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு நடக்கவுள்ள ஐ.பி.எல். தொடருக்கே இவர் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ரிக்கி பொண்டிங் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து 2012 இல் ஓய்வு பெற்றார். 2013 ஆம் ஆண்டு இவரை மும்பை இந்தியன்ஸ் அணி 4 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு - சுமார் 48 இலட்சம் இலங்கை ரூபாவுக்கு வாங்கியது. ஆனால் இவரால் ஐ.பி.எல். போட்டிகளில் சிறப்பாக விளையாட முடியவில்லை. 6 போட்டிகளில் இவர் 52 ஓட்டங்களையே பெற்றார். ஆனால் அந்தத் தொடரில் ரோஹித் சர்மாவின் அதிரடியால் மும்பை சம்பியனானது. இந்த ஆண்டுக்கான தொடரில் ரிக்கி பொண்டிங் மும்பை சார்பில் களமிறங்க வில்லை. இவரை ஆலோசகர்களில் ஒருவராக மும்பை அணி அறிவித்தது. இந் நிலையில் வரும் ஆண்டுக்கான தொடரில் பொண்டிங் அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.


# ஹோலியின் ஹெல்மெட்டை தாக்கிய ஜோன்சனின் பவுன்சர்

(அடிலெய்ட்)

இந்திய வீரர் விராட் ஹோலி சந்தித்த முதல் பவுன்சர் பந்து அவரது ஹெல்மெட்டில் பட்டதால், அவுஸ்ரேலிய வீரர்கள் பதற்றமடைந்தனர்.

இந்திய - அவுஸ்ரேலியா இடையே அடிலெய்டில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

முதல் இனிங்ஸை ஆடிவரும் இந்தியா 52 ஓட்டங்களுக்கு மிட்சல் ஜோன்சன் பந்தில் முரளி விஜய்யை இழந்தது. தொடர்ந்து விராட் ஹோலி களமிறங்கினார்.



விராட் ஹோலி சந்தித்த முதல் பந்தை மிட்சல் ஜோன்சன் பவுன்சராக வீச, அதை தவிர்க்க முயன்றும், ஹெல்மெட்டில் அடி வாங்கிய விராட் ஹோலி அதிர்ச்சியில் சற்று நிதானித்தார். ஆனால் அடுத்த நொடியே சுற்றியிருந்த அவுஸ்ரேலிய வீரர்கள் அனைவரும் விராட் ஹோலி அருகே பதறியடித்து வந்து அவர் நலமாக உள்ளாரா என்று கேட்டறிந்து சென்றனர்.

மிட்சல் ஜோன்சனை கப்டன் மைக்கல் கிளார்க் தட்டிக் கொடுத்து பதற்றமடைய வேண்டாம் என ஆறுதல் தெரிவித்தார்.

# பந்துவீச்சை சீர்செய்ய சென்னை வரும் ஹபீஸ், அஜ்மல்



பாகிஸ்தான் அணியின் சுழல்பந்து வீரர்கள் சயிட் அஜ்மல், மொகமட் ஹபீஸ். இவர்களது பந்து வீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருப்பதாக கூறி சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தடை விதித்துள்ளது.


இதற்கிடையே இந்த இருவரது பந்து வீச்சு முறையை பயோமெக்கானிக் முறையில் பரிசோதனை செய்வதற்காக இருவரையும் சென்னைக்கு அனுப்ப பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. ஐ.சி.சி.யால் அங்கீகாரம் பெற்ற பயோமெக்கானிக் பரிசோதனை கூடம் சென்னையில் உள்ளது.

உலக கோப்பை போட்டிக்கு முன்பு இந்த இருவரது சஸ்பெண்டையும் நீக்க பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாகவே அவர்கள் சென்னைக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்திய விசா கிடைத்தவுடன் அவர்கள் சென்னை வருகிறார்கள்.

# இந்தியாவிற்கு எதிராக அதிக ஓட்டம் இரண்டாவது இடத்தில் கிளார்க்

இந்தியாவிற்கு எதிராக கிளார்க் 2042 ஓட்டங்கள் எடுத்து இந்தியாவிற்கு எதிராக அதிக ஓட்டங்கள் எடுத்த அவுஸ்ரேலிய வீரர்கள் பட்டியலில் 2ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். பொண்டிங் 2555 ஓட்டங்கள் குவித்து முதல் இடத்திலுள்ளார். அதேபோல் 3ஆவது வீரராக களமிறங்கி 28 சதம், 27 அரைசதம் எடுத்து பிரட்மன், ஹெய்டனுடன் இணைந்துள்ளார் கிளார்க். அதுமட்டுமல்லாது அடிலெய்ட் மைதானத்தில் கிளார்க் 1407 ஓட்டங்கள் குவித்துள்ளார். சராசரி 100.50 ஆகும். இதற்கு முன் பிரிஸ்பேன் மைதானத்தில் 1030 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன் சராசரி 103 ஆகும். இதன்மூலம் இரண்டு மைதானத்தில் 100இற்கு மேல் சராசரியுடன் 1000 ஓட்டங்களை கடந்த ஒரே வீரர் என்ற பெருமையை கிளார்க் பெற்றுள்ளார். ஒரே இனிங்சில் அவுஸ்ரேலிய வீரர்கள் 3 பேர் சதம் அடித்தது இது 6ஆவது முறையாகும். அதிலும் அடிலெய்டில் தான் 3 முறை இந்த சாதனையை பெற்றுள்ளனர். இந்தப் போட்டியில் வோர்னர், ஸ்மித், கிளார்க் சதம் அடித்தது குறிப்பிடத்தக்கது.

# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை அடுத்தாண்டு ஆரம்பிக்க நடவடிக்கை



(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை அடுத்த ஆண்டு முற்பகுதியிலிருந்து புதுப்பொலிவுடன் மீள இயக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையின் முன்னாள் பணியாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த ஓட்டுத்தொழிற்சாலையை நவீனமயப்படுத்தி இயங்கவைப்பதற்கு அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றுள்ளது.

அந்தவகையில் ஓட்டுத் தொழிற்சாலையை நவீன முறையில் புனரமைத்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து தொழிற்சாலை இயங்கவுள்ளது.

அந்தவகையில் அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் தொழிற்சாலை இயங்க வைக்கப்படும் அதேவேளை ஒபபந்த அடிப்படையில் பணியாளர்களை உள்வாங்குவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இதனிடையே ஓட்டுத் தொழிற்சாலை பணியாளர்களுக்கான நஷ்டஈட்டினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்) உடனிருந்தார்.

# "பசுமை தேடும் பறவைகள்" நூல், இறுவட்டு வெளியீடு

(வவுனியா)

வவுனியா, தமிழ்ச்சங்கத்தின் அனுசரனையுடன் நோர்வே விஜேந்திரனின் "பசுமை தேடும் பறவைகள்" கவிதை நூல் மற்றும் இறுவட்டுக்களின் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் மங்கள விளக்கேற்றல், தமிழ் வாழ்த்தினைத் தொடர்ந்து வவுனியா தமிழ்ச்சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி. நாதன் வரவேற்புரையினையும், வெளியீட்டுரையினை ஒட்டுசுட்டான் செந்தணல் வெளியீட்டகத்தைச் சேர்ந்த காவியப் பிரதீபா, வன்னியூர் செநதூரன் நிகழ்த்துவர். நூல், இறுவட்டுக்களின் முதல் சிறப்புப் பிரதிகள் வழங்கப்படுவதைத் தொடர்ந்து நயப்புரையினை தமிழ் மணி க.க. அருந்தவராஜா (மேழிக்குமரன்) நிகழ்த்துவார். ஏற்புரையினை அடுத்து நன்றியுரையினை வவுனியா எக்ஸிட்டோ அச்சகத்தைச் சேர்ந்த க. ஜனார்த்தனன் வழங்குவார்.

# மாணவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை வளர்க்க இந்திய துணைத் தூதரகத்தால் நூல்கள் அன்பளிப்பு




(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கில் வடக்கு மாகாணத்தில் உள்ள நூலகங்களுக்கு இந்திய துணைத்தூதரகத்தினால் ஒரு தொகுதி நூல்கள் வழங்கபபட்டுள்ளன.

இதற்கான நிகழ்வுகள் யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இதன்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நூலகங்களுக்கு இந்திய துணைத்தூதரகத்தின் பிரதித்தூதுவர் தட்சணாமூர்த்தி நூல்களை வழங்கி வைத்தார்.

அதற்கமைய அனலைதீவு, கிளிநொச்சி, நானாட்டான், மாந்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூலகங்களுக்கே மேற்படி நூல்கள் வழங்கப்பட்டன.

இதன்போது இந்திய துணைத் தூதரகத்தின் பிரதித்தூதுவர் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் இந்திய அரசினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கான உதவிகள், ரயில் பாதைகள், நூலகங்களுக்கான நூற்தொகுதிகள் வழங்கல் மற்றும் இந்தியன் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை எமது அரசு மேற்கொண்டு வருகின்றது.

இதுமட்டுமல்ல எமது அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும வேலைத்திட்டங்கள் எதிர்காலத்திலும் தொடரும்.

மேலும் ஒவ்வொருபகுதி நூலகர்களும் தங்களது நூலகங்களில் இருக்கும் நூல்களை வாசித்து மாணவர்களுக்கும் சமூகத்தவர்களுக்கும் மிகவும் பயனுள்ளவற்றை வழங்க வேண்டும் என்றார். (48)

# இடைவிட்டு பெய்யும் மழை வெங்காயச் செய்கையில் பாதிப்பு

(அச்சுவேலி)

தற்போது இடையிடையே பெய்துவரும் கன மழை காரணமாக அச்சுவேலி, ஆவரங்கால், சிறுப்பிட்டி போன்ற பகுதிகளில் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, எதிர்வரும் ஜனவரி மாதம் வெங்காயச் செய்கையினை மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளனர். அதாவது அவர்களின் செய்கை நிலங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கி காட்சியளிப்பதால் விவசாய நடவடிக்கைக்கான முன் ஆயத்த வேலைகளான பண்படுத்தல் மற்றும் பசளை இடல் போன்ற செயற்பாடுகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் செய்கை பண்ணப்பட்ட பயிர் நிலங்களுக்குள் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் அவை அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன. இதனால் தமக்கு வருமான இழப்பு ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் விவசாயிகளால் கூறப்படுகின் றது. அத்துடன் கீரை, க்ரட், கருணை போன்ற பயிர்கள் இவ்வாறு அழிவடையும் நிலையில் காணபடுவதுடன் அவற்றை மேலதிக மாக அறுவடை செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளனர். (85)

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## மகரம்

**(உத்திராடம் 2,3,4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்)**

### மந்திரியானாலும் மனதில் பட்டதை பேசுபவர்களே!

இதுவரை உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டு உங்களை எந்த வேலையையும் மன நிறைவுடன் முடிக்க விடாமல் தடுத்ததுடன், உத்தியோகத்திலும் நெருக்கடிகளை தந்த உங்கள் ராசிநாதன் சனிபகவான் இப்போது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள காலகட்டங்களில் இலாப வீட்டில் அமர்வதால் இனி உங்கள் புகழ், கௌரவம் ஒருபடி உயரும்.

நீண்ட காலமாக காணப்பட்ட தொல்லைகளெல்லாம் இனி நீங்கும். கடினமான காரியங்களையும் எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். குடும்ப வருமானம் உயரும். குடும்பத்தினர் இனிமேல் உங்களின் ஆலோசனையின்றி ஒன்றும் செய்ய மாட்டார்கள். கணவன்-மனைவிக்குள் பாசப்பிணைப்பு அதிகரிக்கும். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குழந்தை இல்லாமல் இருந்த தம்பதியர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து இனி சேமிக்கத் தொடங்குவீர்கள். குலதெய்வ கோவிலுக்கு குடும்பதுடன் போய் நேர்த்திக்கடனை முடிப்பீர்கள். எப்போதும் சோர்வு, சலிப்புடன் காணப்பட்ட நீங்கள் இனி உற்சாகமாக செயற்படத் தொடங்குவீர்கள்.

கண்டும் காணாமல் இருந்தவர்கள் உங்கள் வளர்ச்சி கண்டு வியப்பார்கள். சமூகத்தில் மதிக்கத்தகுந்த வகையில் கௌரவ பதவி பெறுவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. உத்தி யோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு இனி தடையின்றி கிடைகக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவியுடன் புதிய தொழில் தொடங்குவீர்கள்.

**சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:**

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்கள் திருதியாதிபதி குருவின் சாரத்தில் விசாக நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் 11ஆம் வீட்டில் சனி செல்வதால் எதிர்பார்ப்புகள் தடையின்றி நிறைவேறும். புது வீடு கட்டி குடிபுகுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். புது வேலை கிடைக்கும். திடீர் பயணங்கள் உண்டு.

14.6.2015 முதல் 5.9.2015 வரை உங்கள் ராசிக்கு 10ஆம் வீடான துலாம் ராசி விசாகம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் சனி செல்வதால் இக்காலகட்டத்தில் புது பொறுப்புகளும், பதவிகளும் தேடி வரும். திருமணம், குழந்தைப்பேறு போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். உத்தியோகத்தில் சின்ன சின்ன பிரச்சினைகள் வந்து போகும்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குருபகவானின் விசாகம் நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் குடும்ப அந்தரங்க விடயங்களை வெளி நபர்களிடம் பகிர்ந்து கொள்ளாதீர்கள். சொத்து, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். காணாமற்போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும்.

15.3.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள காலகட்டங்களில் சனிபகவான் அனுஷ நட்சத்திரத்திலேயே வக்ரமாவதால் வீண் ரென்ஷன், விரையம், மந்தம், மறதி, மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். ஆனால் உங்கள் வளர்ச்சி தடைப்படாது. முயற்சிகள் வெற்றியடையும்.

08.04.2017 முதல் 5.08.2017 வரை புதனின் கேட்டை நட்சத்திரத்திலேயே சனி வக்ரமாகி செல்வதால் இக்காலகட்டத்தில் நண்பர்கள், உறவினர்கள் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். திடீர் பயணங்களும், செலவுகளும் இருக்கும்.

புது முதலீடு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். அயல்நாடு தொடர்புடைய நிறுவனங்களுடன் புது ஒப்பந்தங்கள் செய்வதன் மூலம் உங்கள் நிறுவனத்தின் புகழ் கூடும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புது பொறுப்புகளை மூத்த அதிகாரிகள் உங்களிடம் ஒப்படைப்பார்கள். இழந்த சலுகைகளையும், மதிப்பு மரியாதையையும் மீண்டும் பெறுவீர்கள். தலைமைப் பொறுப்பு தேடி வரும்.

கன்னிப்பெண்களே! உங்கள் ரசனைக்கேற்றபடி நல்ல கணவர் அமைவர். தடைப்பட்ட கல்வியில் வெற்றியுண்டு. கசந்த காதல் இனிக்கும். பெற்றோரின் ஆலோசனையை ஏற்பீர்கள். மாணவ-மாணவிகளே! படிப்பிலிருந்த மந்த நிலை மாறும். விளையாட்டில் பரிசு,பாராட்டு உண்டு.

இந்தச் சனிப்பெயர்ச்சியால் திக்கித்திணறி தவித்துக் கொண்டிருந்த உங்கள் வாழ்வில் திடீர் திருப்பத்தையும், புதிய அத்தியாயத்தையும் தொடங்கி வைப்பதாக அமையும்.

**பரிகாரம்!**

**சித்திரபுத்திர நயினாரை வணங்கி ஏழைகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள். துர்க்கை வழிபாடு நடத்துங்கள். வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியையும், ஞாயிற்றுக் கிழமைகளில் ராகுகாலத்தில் பைரவரையும் வணங்கி வாருங்கள். தினமும் விநாயகர், துர்க்கை, ஆஞ்சநேயரை வழிபடுங்கள். ஏழைகளுக்கு இயன்ற உதவி செய்யுங்கள்.**

(நாளை கும்பம்)

# எல்லாமே எமோஷனல்தானா?



– வா.மணிகண்டன் –

சமீபத்தில் ஒரு சமூகவியல் பேராசிரியரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஓய்வு பெற்றவர். எப்பொழுதுமே நல்ல ஆசிரியர்களிடம் பேசிக் கொண்டிருந்தால் நம் அறிவின் ஜன்னல்களைத் திறந்துவிட்டு விடுவார்கள். இவரும் அப்படித்தான்.

அந்தச் சமயத்தில்தான் தமிழக மீனவர்களை இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அழைத்து வந்திருந்தார்கள். தமிழகத்தில் பெரிய விழாவெல்லாம் நடத்தி விடுதலையான மீனவர்களுக்கு அரசு ஊழியர்கள் மாலையிட்டு அந்த விழாவை தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பும் செய்திருந்தார்கள். என்ன அரசியல் பின்னணி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும் ஐந்து மீனவர்கள் விடுதலை ஆகிறார்கள் அல்லவா என்று நினைத்திருந்தேன்.

அதைப்பற்றித்தான் அந்த பேராசிரியர் கேட்டார். "ஏன் இந்த மீனவர்களை அடிக்கடி இலங்கைக்காரன் பிடித்துக்கொண்டு போகிறான்?"

"தமிழன் என்றாலே ராஜபக்ஷவுக்கு வேப்பங்காய் சார்" என்றுதான் பதில் சொல்லியிருப்பேன். ஆனால் அது பக்குவமில்லாத பதிலாக இருக்கும். அடக்கிக் கொண்டேன். சரியான பதிலைச் சொல்ல முடியவில்லை. அவர் கேட்கிற கேள்வியில் உள்ளர்த்தம் இருந்தது. "நம் மீனவர்களிடம் தப்பே இல்லையா?" என்கிற அர்த்தம் அது.

"ராமேஸ்வரம் இலங்கைக்கு மிக நெருக்கமாக இருக்கிறது அதனால் அந்த ஊர் மீனவர்கள் தெரியாத்தனமாக எல்லை மீறிவிடுகிறார்கள் போலிருக்கிறது" என்று கூட அவரிடம் சொல்லலாம்தான். ஆனால் அதற்கு இடமே தராமல் "ஏன் இலங்கை மீனவர்கள் தெரியாத்தனமாக எல்லை மீறுவதே இல்லையா? அவர்களை ஏன் இந்தியா கைது செய்வதில்லை" என்றார்.

அவரது நோக்கம் இந்திய மீனவர்கள் மீது குற்றம் சாட்டுவதில்லை. இதைப் பற்றி ஏன் எந்தவொரு தெளிவான விவாதமும் நடப்பதில்லை என்பதுதான்.

உண்மையிலேயே தமிழர்கள் என்பதால்தான் இலங்கை கடற்படை கைது செய்கிறதா? கேரள மீனவர்களும் ஆந்திர மீனவர்களும் இலங்கைக் கடல் எல்லைக்குள் செல்வதற்கான வாய்ப்பே உருவாகுவதில்லையா? ஏன் அவர்கள் கைது பற்றிய எந்தச் செய்தியும் வருவதில்லை.

பாகிஸ்தான்காரனும் தான் குஜராத்திலிருந்தும் மஹாராஷ்டிரா விலிருந்தும் செல்லும் மீனவர்களைப் பிடிக்கிறான். ஆனால் இலங்கையில் சிக்கும் தமிழக மீனவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டால் அது சொற்பம். பாகிஸ்தானுக்கு இந்தியர்கள் மீது இருக்கும் வெறுப்பைக் காட்டிலும் இலங்கைக்கு தமிழர்களின் மீது வெறுப்பு அதிகமா? அப்படியே வெறுப்பு இருந்தாலும் அதை மீனவர்களிடம் காட்டி அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எனக்கு பதில்கள் தெரியும் என்று சொல்லவில்லை. ஆனால் இந்த அரசுகளும் அரசியல்வாதிகளும் சொல்வதை அப்படியே நம்பிக் கொண்டிருக்கிறோம். இல்லையா?

தமிழகக் கடலில் ஓடும் பெரும்பாலான படகுகள் அரசியல்வாதிகளுடையது என்கிறார்கள். எல்லாவிதமான சட்டத்திற்குப் புறம்பான வேலைகளையும் அந்தப் படகுகளின் மூலமாக செய்கிறார்களாம். போதைப் பொருள் கடத்தலிலிருந்து கட்டப்பஞ்சாயத்து வரை. சகலமும்.

இலங்கையின் கடல் எல்லைக்குள் சென்று உலக அளவில் தடைசெய்யப்பட்ட முறைகளை பயன்படுத்தி மீன் பிடிக்கிறார்கள். Destructive Fishing Practices என்று கூகிளில் தேடிப்பார்க்கலாம். அதில் ஒன்று Trawling. மிகப் பெரிய வலைகளை வீசி கடல் ஆழத்தில் இருக்கும் மண்ணோடு சேர்த்து இழுத்துவிடுவார்கள். கடல்பாசி. முட்டை, குஞ்சு, குளுவான் என்று எதுவும் மிச்சம் ஆகாது. இப்படி அடியோடு அழித்துவிட்டு வந்தால் அந்த நாட்டு மீனவன் என்ன செய்வான்? அதுதான் பிடித்துப் போடுகிறார்கள்.

இப்படி எவ்வளவோ பிரச்சினைகள் பின்னணியில் இருக்கக் கூடும். ஆனால் பிரச்சினைகளை விரிவாக பேசாமல் அரசியல் ஆக்கிவிடுகிறோம். தொண்டை நரம்பு புடைக்க "அடேய்...எங்கள் மீனவர்களையா பிடிக்கிறாய்?" என்று மேடையில் கத்தி உசுப்பேற்றுகிறார்கள். நாமும் அப்படியே நம்பிக் கொள்கிறோம். யாராவது ஒருவர் இதைப் பற்றி வெளிப்படையாக பேசினால் அவரைத் [illegible] துரோகி ஆக்கி மாநிலத்தை [illegible] துரத்திவிட்டுவிடுவார்கள்.

---

# கே.வி. மகாதேவன் 40

– பி.ஜி.எஸ்.மணியன் –

திருவிளையாடலில் அடுத்து டி.ஆர். மகாலிங்கத்தின் கணீர்க் குரலில் இரண்டு பாடல்கள். இரண்டுமே சிறப்பான பாடல்கள்.

"இல்லாததொன்றில்லை" என்ற விருத்தம் - சிம்மேந்திர மத்யமம், ஹிந்தோளம் ஆகிய இரண்டு ராகங்களின் சேர்க்கையில் அமைந்தது.

பீம்ப்ளாசில் அதாவது ஆபேரியில் - "இசைத் தமிழ் நீ செய்த அரும் சாதனை." - பாடலின் உச்சத்தில் பொங்கும் உணர்ச்சிப் பெருக்கும், அதை சிறப்பாக பிரதிபலிக்கும் வண்ணம் வரிகளுக்கிடையே இணைத்திருக்கும் இணைப்பிசையும் பாடலை சிகரத்தில் ஏற்றி நிறுத்திவிடுகிறது.

இந்த மாதிரி ஒரு பாடலைக் கேட்டபிறகும் இறைவன் சும்மா இருப்பாரா?. பாணபத்திரருக்காக விறகு விற்க மட்டுமல்ல எதைச் செய்யவும் இறங்கி வரமாட்டாரா?

அப்படி விறகுவெட்டியாக வரும் இறைவன் பாடுவதாக அமைந்த "பார்த்தாப் பசுமரம் படுத்துவிட்டா நெடுமரம்" - சரியான நாட்டுப்புற மெட்டுப் பாட்டு. ராகம் சிந்துபைரவி.

அடுத்து ஹேமநாத பாகவதரின் ஆணவத்தை அடக்குவதற்காக விறகு வெட்டியாக வந்த பரமன் அவர் தங்கி இருக்கும் மாளிகையின் வெளியே உள்ள திண்ணையில் வந்து படுத்துக்கொண்டு பாடுவதாக அமைந்த பாடல் "பாட்டும் நானே பாவமும் நானே".



டி.எம். சௌந்தரராஜன் அற்புதமாகப் பாடி இருக்கும் இந்தப் பாட்டுக்கு மகாதேவன் அமைத்த இசை... உச்சத்தின் உச்சம். "கௌரி மனோகரி" ராகம்.

இந்த ராகம் அந்தப் பாடலுக்கும் காட்சி அமைப்புக்கும் எப்படிப் பொருந்தி வந்திருக்கிறது என்று பார்த்தால் வியப்புத் தான் மேலிடுகிறது.

அதனைப் பார்ப்பதற்கு முன்னால் "கௌரி மனோகரி" ராகத்தைப் பற்றி கொஞ்சம் தெரிந்துகொள்வோம்.

கௌரிமனோகரி ஒரு மேளகர்த்தா ராகம். மேளகர்த்தா ராகம் என்றால்..?

நமது முன்னோர்கள் ராகங்களை மேளகர்த்தா ராகங்கள் என்றும் ஜன்ய ராகங்கள் என்றும் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

மேளகர்த்தா ராகங்கள் என்றால் ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழு [illegible]களும் ஆரோகணம், அவரோகணம் இரண்டிலுமே முழுமையாக இடம் பெற்றிருக்கும் ராகங்கள். இப்படி மேளகர்த்தா ராகங்கள் 72.

இந்த எழுபத்திரண்டு ராகங்களிலிருந்து பிறந்தவைதான் ஜன்ய ராகங்கள்.

இப்படிப்பட்ட எழுபத்திரண்டு ராகங்களையும் வகைக்கு ஆறு என்று 12 வகைகளாகத் தொகுத்துக் கொடுத்திருக்கின்றனர். அந்த வகைகளுக்கு சக்கரங்கள் என்று பெயர்.

இந்து சக்கரம், நேத்திரச் சக்கரம், அக்னிச் சக்கரம், வேதச் சக்கரம் என்று ஆரம்பித்து 12 சக்கரங்களில் வகைக்கு ஆறு ராகங்களாகப் பிரித்து வைத்திருக்கின்றனர்.

கௌரிமனோகரி நான்காவது சக்கரமான வேத சக்கரத்தில் இடம் பெறும் ராகம்.

இது சொல்லமுடியாத சந்தோஷத்தையும், மனநிறைவையும் தரும் ராகம். எல்லாக் காலங்களிலும் பாடக்கூடிய ராகம்.

கௌரிமனோஹரி என்றால் இறைவனின் மனத்தைக் கொள்ளை கொண்டவள் என்று பொருள். அது மட்டும் அல்ல இந்த ராகமும் கேட்பவர் மனதை கொள்ளைகொள்ளக் கூடியது என்றும் பொருள் கொள்ளலாம்.



பிரயோகங்களுக்கும் சஞ்சாரங்களுக்கும் அதிகமாக இடம் கொடுக்கக் கூடிய ராகம். சங்கீதத்தில் "சௌக்கியம்" என்ற ஒரு அம்சம் உண்டு. அந்த சௌக்கிய பாவம் பூரணமாக நிரம்பப் பெற்ற ராகம் கௌரி மனோஹரி. மன உளைச்சலையும், பதற்றத்தையும் குறைத்து அமைதியையும் சாந்தியையும் கொடுக்கவல்ல ராகம்.

இன்னொரு முக்கியமான சிறப்பம்சம் என்னவென்றால் கோவில்களில் ஓதுவார்கள் தேவாரம் இசைக்கும் போது காம்போதிக்கு அடுத்தபடியாக அதிகம் பயன்படுத்தக்கூடிய ராகம் இந்த கௌரி மனோஹரிதான்.

இந்த ராகத்தின் முத்திரையை அழுத்தம் திருத்தமாக பாடலில் பதித்திருக்கிறார் கே.வி. மகாதேவன். அவர் கையாண்டிருக்கும் பிரயோகங்கள் இந்தப் பாடலை கௌரிமனோஹரி ராகத்துக்கு ஒரு கலைக் களஞ்சியமாக பிற்கால இசை அமைப்பாளர்கள் கையாள்வதற்கு ஒரு கையேடாக மாற்றி இருக்கின்றன.

ஆரம்பத்தில் 45 நொடிகளுக்குள் வரும் ஆலாபனையில் ராகத்தின் சொரூபத்தை முழுவதுமாகக் கொண்டுவந்து "பாட்டும் நானே" என்று டி.எம்.எஸ். தொடங்கும் போது ஹேமநாத பாகவதராக வரும் டி.எஸ். பாலையா மட்டுமா - பாடலைக் கேட்கும் நாமுமல்லவா நிமிர்ந்து உட்காருகிறோம்!

ஆறு நிமிடம் இருபத்தைந்து நொடிகளுக்குள் ஒரு அற்புதமான கச்சேரி கேட்ட நிறைவை ஏற்படுத்தும் பாடல் இது.

இப்படி காட்சியோடு நூறு சதவிகிதம் பொருந்திப் போகும் அளவுக்கு ஒரு பாடலுக்கான ராகத்தை யோசித்துத் தேர்ந்தெடுத்தாரா அல்லது அந்த ராகமே வந்து தன்னைப் பயன்படுத்திக்கொள்ளத் தூண்டியதா என்று வியக்கும் வண்ணம் அமைந்த பாடல்.

அதனால் தான் படம் வெளிவந்து ஐம்பது ஆண்டுகளை நெருங்கிய போதிலும் இன்றளவும் பொலிவு குன்றாமல் காற்றலைகளில் வலம் வந்துகொண்டிருக்கிறது இந்தப் பாடல்.

இறுதியில் மீண்டும் அம்மை அப்பனோடு முருகனைக் காண வரும் அவ்வை பாடுவதாக ஒரு விருத்தம். "வாசி வாசி என்று வாசித்த தமிழின்று" என்று துவங்கும் இந்த விருத்தத்தை நீலாம்பரி ராகத்தைப் பயன்படுத்தி அமைத்திருக்கிறார். சரியாக ஒரு நிமிடம் ஐந்து நொடிக்குள் இந்த நீலாம்பரி என்னமாய் நம்மைச் சொக்க வைக்கிறது! தொடர்ந்து "ஒன்றானவன் உருவில் இரண்டானவன்" என்று கே.பி. சுந்தராம்பாள் பாடும் பாடலை சிந்துபைரவியில் ஆரம்பித்து "ஆணாகிப் பெண்ணாகி நின்றானவன்" என்று தொடங்கும்போது "ஆனந்த பைரவியில்" தொடர்ந்து பாடலைச் சிகரத்தில் ஏற்றி உச்சத்துக்குக் கொண்டுவந்து நிறுத்தி பாடலை மட்டுமல்ல - திருவிளையாடல் படத்தையே முடித்து வைக்கிறார் கே.வி. மகாதேவன்.

படம் தொடங்குவதும் மகாதேவனின் இசையில். முடிவதும் அவரது இசையோடுதான் என்பது இன்னுமொரு வியக்க வைக்கும் பொருத்தம்.

(தொடரும்)

சரி விடுங்கள்.

நம் மீனவர்கள் நல்லவர்கள், என்றே வைத்துக் கொள்வோம். அப்பாவிகள் என்றே இருக்கட்டும். எதனால் இத்தனை கைதுகள் நடக்கின்றன என்ற கேள்விக்கு நம்பும்படியான காரணம் என்ன இருக்கிறது? அதையெல்லாம் ஏன் எந்தப் பத்திரிகையிலும் எழுதுவதில்லை.

எல்லாவற்றையும் எமோஷனலான சங்கதிகளாக மாற்றிக் கொள்கிறோம். இல்லையா? குஷ்பு விவகாரம் மாதிரி.

அவர் விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று சொல்லிவிட்டார் என்பதால் பிராண்டித் தள்ளுகிறோம். இதே விஷயத்தைத்தான் ஷோபாசக்தி போன்றவர்கள் காலங்காலமாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போன்றவர்களிடம் விவாதித்தால் உருப்படியானதாக இருக்கும். அது அறிவுசார்ந்த விஷயமாக இருக்கும். அதைவிட்டுவிட்டு குஷ்புவை பார்த்து "உன் யோக்கியதை தெரியாதா?" என்று கேட்டால் அவர் என்ன செய்வார்?

## அறுகு மகத்துவம்

* அறுகம் புல்லை தண்ணீரில் காய்ச்சிக் கற்கண்டு சேர்த்து சாப்பிட ஆஸ்துமா குணமாகும்.

* அறுகம்புல் சாறுடன் தேன் கலந்து சாப்பிட இரத்தம் சுத்தமாகும்.

* அறுகம் வேரை பசும்பாலில் அரைத்து நெற்றியில் பற்றுப் போட தலைவலி குணமாகும்.



* அறுகம்வேரை அரைத்து பசுவின் பாலில் கலந்து அருந்தி வந்தால் உடல் தேறி பலம் பெறும்.

## சுவர்த் தத்துவங்கள்




**(நகைக்கடை ஒன்றில்)**
சிரித்த முகத்தோடு இருங்கள்
கமெரா உங்களைப் படம்
பிடிக்கிறது.

**(மதுக்கடை ஒன்றின் பெயர்ப் பலகையில்)**
சமரசம் உலாவும் இடம்

**(ஒரு லொறியின் பின்புறம்)**
குறை சொல்வதைக் குறை

**(ஒரு தையல் கடையில்)**
"வெட்டி வேலை செய்பவர்"

**(மின்நிலையத்தின் சுற்றுச் சுவரில்)**
பாதுகாப்புக்கு விடுமுறை இல்லை

**(ஒரு வீட்டு முன் நடப்பட்ட செடியின் கம்பி வலையில்)**
என்னை வாழ விடுங்கள்

**(ஓர் ஆட்டோவில்)**
வாழ்ந்து காட்டுவதை விட
பழி வாங்கும் செயல்
வேறு எதுவும் இல்லை.

**(ஒரு டாக்ஸியில்)**
நவீன தாய்
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை
கோடீஸ்வரன் எனக்கேட்ட தாய்.

**(தேநீர்க் கடையில்)**
வங்கிகளின் வேலை
கடன் தருவது,
டீ போடுவது அல்ல.
எங்களின் வேலை
டீ போடுவது,
கடன் தருவதல்ல.

**(உணவகம் ஒன்றில் கை கழுவும் இடத்தில் உள்ள கண்ணாடியில்)**
நீங்கள் அஜித், சூர்யா போல் இருக்கிறீர்கள்.
நாங்கள் நம்புகிறோம்.
தயவுசெய்து
தலையை இங்கு வார வேண்டாம்.

**(ஒரு ரியூட்டரியில்)**
உங்கள் குழந்தைகளைப்
படித்த ஆசிரியரிடம்
ஒப்படைக்காதீர்கள்!
படிக்கின்ற ஆசிரியர்களிடம்
ஒப்படையுங்கள்!

**(ஒரு முடிதிருத்தகத்தில்)**
தவீறு செய்தால்
மன்னிப்புக் கேட்பதைக்
கௌரவமாகக் கருதுங்கள்.

**(ஆட்டோவின் பின்புறத்தில்)**
வாழ்க்கையில்...
தட்டிவிட்டவரையும்...
தட்டிக் கொடுத்தவரையும்...
மறவாதே.

**(ஒரு காரின் பின்புறத்தில்)**
வாய்விட்டு அழு
வழிவிடுகிறேன்

**(இன்ரர்நெற் கடை ஒன்றில்)**
நல்லவனாக இரு.
ஆனால் அதை நிரூபிக்க
முயற்சி செய்யாதே.
அதைவிட
முட்டாள்தனமான
விஷயம்
வேறு எதுவுமில்லை.

**(இரு சக்கர வாகனத்தின் பின்புறம்)**
நல்லவன் என்று பெயர் வாங்கினால்...
அதைக் காப்பாற்ற நடிக்க வேண்டும்.
கெட்டவன் என்று பெயர் வாங்கினால்...
நல்லவனாக் முயற்சி செய்து கொண்டே இருக்கலாம்.

**(ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில்)**
அடிக்கடி வருவதற்கு இது கோயிலல்ல;
வராமல் இருப்பதற்கு இது ஒன்றும்
சிறைக்கூடம் அல்ல.

**(ஒரு வீட்டு வரவேற்பறையில்)**
இலட்சக்கணக்கான மைல்கள்
ஓர் அடியில்தான் தொடங்குகிறது

## விசேட கடிகாரங்கள்!

நேரம் பார்ப்பதற்கு செல்போன்கள் வந்துவிட்டதால், கைக்கடிகாரங்களுக்கு மரியாதை குறைந்துவிட்டது என்றுதான் நினைத்திருந்தோம். ஆனால் GARMIN என்ற நிறுவனம் FORERUNNER 220 மற்றும் 620 என்ற இரண்டுவிதமான கடிகாரங்களை வெளிக் கொண்டு வந்திருக்கிறது.

உடற்பயிற்சி செய்பவர்கள், குறிப்பாக தினம்தோறும் ஓடும் பயிற்சி செய்பவர்கள் இந்த கைக்கடிகாரத்தை அணிந்து கொண்டால் ஒரு டாக்டர் கூடவே இருப்பதைப் போல உணர்வார்களாம்.

உடலுக்குப் பயிற்சி தரும்போது ஏற்படும் இதயத்துடிப்பு, உடலின் வெப்பம் ஆகியவற்றைக் கணக்கெடுத்து, தேவையான அறிவுறுத்தல்களை இந்த கடிகாரங்கள் தருகின்றனவாம்.




உடற்பயிற்சி செய்யும்போது எவ்வளவு ஒட்சிசன் உட்கிரகிக்கப்படுகிறது, எவ்வளவு கலோரிகள் செலவாகின்றன? எவ்வளவு சக்தி உட்லில் இருந்து வெளிப்படுகிறது? என்பதையெல்லாம் இந்த கடிகாரங்கள் கவனித்து, உடற்பயிற்சிக்குப் பின்பு எவ்வளவு நேரம், எவ்வளவு நாட்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றன. கடிகாரத்தில் ப்ச்சை விளக்கு எரிந்தால் தொடர்ந்து ஓடலாம். சிவப்பு விளக்கு எரிந்தால் 3 நாட்கள் வரை ஓய்வெடுக்க வேண்டும். உடல் நலனில் அக்கறையுள்ளவர்களுக்குத் தேவையானதுதானே இந்த கடிகாரங்கள்!

## உள்ளத்தில் இடம் கொடுப்போம்!

உபசரிப்பு, விருந்தோம்பல் மற்றும் அன்னதானம் பற்றி பல்வேறு சமய நூல்களும் விரிவாகவே கூறுகின்றன. "பாத்திரம் அறிந்து பிச்சை இடு" என்ற பழமொழியும் உண்டு. அப்படி பாத்திரம் அறிந்து பிச்சை இடுவதில் உள்ள உயர்வு குறித்து, "பகரும் ஞானி பகல் ஊண்



பலத்திற்கு நிகரில்லை என்பது நிச்சயம் தானே..." என்று திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார் திருமூலர்.

அதை விளக்கும் கதை இது:

ஆகுகன் - ஆகுகி எனும் வேடுவ தம்பதி, மலை அடிவாரத்தில் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தனர். அவர்கள், அவ்வழியாக வருபவர்களை வரவேற்று உபசரிப்பதும், அருகில் உள்ள கோவிலில் வழிபாடு செய்வதையும் வழக்கமாக கொண்டிருந்தனர்.

ஒருநாள், அந்தி சாயும் நேரத்தில், தவயோகி ஒருவர் அவ்வழியே வந்தார். அவரை வரவேற்று உபசரித்தனர். பின், ஆகுகனிடம், தவயோகி, "அப்பனே... இன்று இரவு தங்குவதற்கு இடம் தர வேண்டும்..." என்றார்.

அந்த வேடனின் குடிசையிலோ இருவர் மட்டுமே தங்க முடியும் மூன்றாவது நபருக்கு இடம் இல்லை. ஆனால், எதைப் பற்றியும் யோசிக்காமல், தவயோகியையும், தன் மனைவியையும் குடிசைக்குள் தூங்கச் சொல்லிவிட்டு, காட்டு விலங்குகள் உலவும் அந்த இரவில், குடிசைக்கு வெளியே கையில் வில்லுடன் காவலுக்கு நின்றான் ஆகுகன்.

அப்போது, அங்கு வந்த புலி ஒன்று, ஆகுகனை தாக்கிக் கொன்றது.

பொழுது விடிந்ததும், கணவனைக் காணாமல் திகைத்த ஆகுகி, சிறிது தொலைவில், சிதைந்த நிலையில் கணவனின் உடலைக் கண்டு, விவரமறிந்தாள். உடனே, தீயை மூட்டி கணவரின் சிதைந்த உடற்கூறுகளை அதில் போட்டு, தானும் உயிர் துறக்க துணிந்தாள்.

அப்போது, இறைவன் அவளுக்கு காட்சியளித்து, "பெண்ணே... நீயும், உன் கணவனும் ஒரு தவயோகிக்கு உணவும், அடைக்கலமும் கொடுத்து உபசரித்ததால், நீ, அடுத்த பிறவியில் விதர்ப்ப நாட்டு மன்னன் மகளாக பிறந்து, தமயந்தி எனும் பெயர் பெறுவாய் உன் கணவன் நிடத நாட்டு மன்னன் வீரசேனன் மகனாக பிறந்து, நளன் எனும் பெயர் பெறுவான். உங்கள் இருவரின் இந்த முடிவிற்கு காரணமான தவயோகி, அன்னப் பற வையாக பிறந்து, உங்கள் இருவரையும் சேர்த்து வைப்பான்..." என்று கூறி மறைந்தார்.

நளனையும், தமயந்தியையும் அன்னப்பறவை சேர்த்து வைத்த கதையை, "நள உபாக்யானம்" என்ற நூல் விரிவாகவே கூறுகிறது.

தர்ம சிந்தனையும், சுயநலமற்ற உபகாரமும் என்றுமே அர்த்தமற்றுப் போய் விடாது என்பதற்கு ஆகுகன் - ஆகுகி கதையே சான்று! அதனால், இத்தகைய நல்ல பண்புகளுக்கு உள்ளத்தில் இடம் கொடுப்போம் என, உறுதி எடுப்போம்.

**- பி.என். பரசுராமன் -**

# பல அற்புத வரலாற்றை அச்சாணியாகக் கொண்ட முல்லைத்தீவின் முள்ளியவளைக் கிராமம்.




**முள்ளியவளை இலங்கையின் வடகிழ்பால் இலங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒரு புராதன ஊராகும். வன்னியரசர்கள், யாழ்ப்பாண அரசர்கள் காலம் தொட்டு இருந்துவரும் ஒரு நீண்ட வரலாறுடைய இடமான இவ்ஊர் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ளது. இங்கு கலையும் பண்பாடும் கல்வியும் பாங்கோடு வளர்ந்துவருவது அவதானிக்கத்தக்கது. இங்கு வாழும் மக்கள் குறிப்பாக அன்றி பல்வகைப்பட்ட தொழில்களையும் ஆற்றி வருகின்றனர். அண்மைக்காலமாக கல்வியில் முன்னேற்றம் கண்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதற்கு இங்கு உள்ள முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி முக்கிய பங்கு ஆற்றுவது மறக்க முடியாத உண்மையாகும்.**



முள்ளியவளை விதியானந்தக் கல்லூரி

**இங்கு பிறந்த இசைத்தமிழ் கலைஞர்கள்**

அண்ணாவியார் சூ. பொன்னையா
அண்ணாவியார் சுப்பையா
முல்லை சகோதரிகள் புவனா இரத்தினசிங்கம்

**நாடகத்தமிழ் கலைஞர்கள்**

க. கனகசபை
க. கந்தசாமி (சங்கர்)
அருணா செல்லத்துரை
என். எஸ். மணியம்

**இயற்றமிழ் கலைஞர்கள்**

சி. ச. அரியகுட்டிப்பிள்ளை
முல்லைமணி கலாநிதி வே. சுப்பிரமணியம்
சிவனேசன் வே. கந்தையா
அரியான் பொய்கை கை. செல்லத்துரை
கோ. குட்டித்தம்பி, த. கைலாயப்பிள்ளை
அ. பாலமனோகரன்
முல்லையூரான் மு. சிவராசா
கணுக்கேணியூர் ஐங்கரலிங்கன்
இளைய அப்துல்லா

**கல்வியாளர்கள்**


பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர்
பேராசிரியர் ம. இரகுநாதன்





**தமிழ் இலக்கியப் பெருவிழா முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் செப்ரெம்பர் 1ஆம் மற்றும் 2 ஆம் திகதிகளில் இடம் பெற்றது. அவ்விழாவின்போது இடம்பெற்ற ஆய்வரங்கு, சிறந்தநூலுக்கான விருது, ஆளுநர் விருது, பண்பாட்டு ஊர்வலம், மற்றும் கலை நிகழ்ச்சிகள் தொடர்பானவற்றுள் சில ஒளிப்படங்கள் இங்கு உள்ளன**

## வற்றாப்பளை அம்மன் ஆலய வரலாறு




அடங்காப்பற்று என அழைக்கப்படும் இவ் வன்னிப் பிரதேசத்தை வன்னி மன்னர்கள் ஆட்சி செய்தபோது யாழ்ப்பாண மன்னர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றோருக்கு கப்பம் செலுத்தினர். இவர்களின் பின் வருகைதந்த ஆங்கிலேயர்களை எதிர்க்குமளவிற்கு வீரம் கொண்டவர்களாகப் பிற்காலத்தில் விளங்கினர். இத்தகைய வன்னி மன்னர்களால் பரிபாலிக்கப்பட்ட இவ்வாலயத்தை போர்த்துக்கேயர் காலத்தில், போர்த்துக்கேய தளபதியாகிய நெவில் என்பவன் அழிக்க முற்பட்டபோது ஆலயத்தில் நின்ற பன்னிச்சை மரம் தனது காய்களை வீசி ஆலயத்தை அழிக்க விடாது தடுத்தது. இவ் அற்புத வரலாற்றை ஆலயத்தில் இன்றும் படிக்கப் படும் பன்னிச்சை ஆடிய பாடற்சிந்து மூலம் அறிய முடிகிறது.

இலங்கையில் முல்லைத்தீவில் ஆரம்பகாலத்தில் விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்ட பொங்கல் வழிபாடானது பின்னர் 1950 களில் வாரம் ஒருநாள் என்ற வழிபாடாகி பின்னர் வேதாகம வழிப்படி முறையான பூசைகளுடன் ஆரம்பிக்கப் பட்டது. 1958களில் ஆலயபரிபாலன சபையின் கீழ் கொண்டுவரப்பட்டு திங்கள் வெள்ளி தோறும் விசேட அபிசேகம் என்ற முறையில் ஆலய வழிபாடுகள் நடைபெறத் தொடங்கின. இவ் ஆலயமானது ஆங்கிலேயர் காலத்திலேயே பிர பலமாக விளங்கியது. தமிழர்கள் மாத்திரமன்றி சிங்களவர்களும் வழிபட்டு வருகின்றனர்.



## முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயம்



முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் முள்ளியவளை கிராமத்தின் 2 ஆம் வட்டாரத்தில், முள்ளியவளை மத்தி கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ளது. இதனை முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதியில், முல்லைத்தீவில் இருந்து ஆறாவது மைல் கல் தூரத்தில் உள்ள சந்தியில் கிழக்காக செல்லும் வீதியில் சுமார் 200 மீற்றர் பயணிப்பதன் மூலம் அடையலாம்.

வன்னி மன்னர்கள் காலம் தொட்டு முள்ளியவளையில் காட்டா விநாயகர் ஆலயம் இருந்துவருகிறது. முள்ளியவளையின் கிழக்கே உள்ள ஐயனார் கோவில் அருகில் இருந்த கோட்டையை ஆட்சி செய்த வன்னி மன்னன் விநாயகரின் பூசைஎய தூர இருந்தே தரிசித்ததாக கூற கேட்கலாம். இவ் ஆலயம் வற்றாப்பளை அம்மன் வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொணடது. வைகாசி விசாகத்தை அண்மித்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்திலும் அடுத்த நாள் (திங்கள்) வற்றாப்பளை அம்மன் ஆலயத்திலும் பொங்கல் நடைபெறும். அம்மன் ஆலயத்தில் எரிக்கப் படும் கடல் நீர் விளக்கு அதற்கு முந்திய 7 நாட்களும் காட்டா விநாயகர் ஆலயத்தில் வைத்து மடை பரவி அதன் நடுவே தொடர்ந்து எரிய விடப் படும்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் "கந்தன்" என்ற ஒரு பக்தன் வெள்ளையர் துரத்த இவ் ஆலயத்திற்கு அருகில் இருந்த கொன்றை மரம் ஒன்றில் ஏறி ஒழிந்து கொண்டதாகவும், விநாயகரை வேண்டி "என்னைக் காட்டாதே" என்று துதிக்க வெள்ளையர் கண்ணுக்கு குளவிக்கூடாக தோன்றியதாகவும் கிராமத்தவர்கள் கூறக்கேட்கலாம். அதற்கு காணிக்கையாக கந்தன், மணி ஒன்றை செய்வித்து ஆலயத்திற்கு கொடுத்தான். அம்மணி இன்றும் ஆலயத்தில் "நினைவன் கந்தன்" என்ற பெயர் தாங்கியவாறு காணப்படுகிறது.

# பெண்கள் துணிச்சலுடன் செயற்பட்டாலே வன்முறைக்கான சந்தர்ப்பத்தை தவிர்க்கலாம்

## வைத்திய கலாநிதி பவானி தெரிவிப்பு



பெண்களின் பயமே வன்முறைக்கு காரணமாக அமைகின்றது. பயம் இல்லாது துணிச்சலுடன் செயற்படும் பெண்களுக்கு வன்முறை இடம்பெற வாய்ப்பில்லை. பெண்கள் பயத்தை உதறித்தள்ளி துணிச்சலுடன் செயற்பட வேண்டும் என யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் தலைவியும்,மகப்பேற்று வைத்திய நிபுணருமான பவானி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

குறிப்பாக பெண்கள் பத்திரிகையில் அழகு குறிப்பு,சினிமா பார்ப்பதை தவிர்த்து வன்முறை எவ்வாறு இடம்பெறுகின்றது இதற்கு காரணம் என்ன என்பது பற்றிய விடயத்தை அறியவேண்டும் பெண்களாகிய நாம் பயத்தை நீக்கி துணிச்சலுடன் செயற்பட்டால் வன்முறையாளர்கள் நம்மை நெருங்க முடியாது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.


முதலில் பெண்களின் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். வன்முறைக்குட்படாமல் இருக்க நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை சிந்தித்து செயற்பட்டால் வன்முறையை ஒழிக்கலாமே தவிர முற்றாக வன்முறையை ஒழிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

# பிரதேச செயலகத்தின் கீதம் வெளியிடப்பட்டது

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கான கீதம் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. வலி.வடக்கு பிரதேசத்தின் பண்பாட்டு கூறுகள், வளங்கள், கலைகள், ஊரின் சிறப்புக்கள் என்பவற்றினை உள்ளடக்கிய வகையில் பிரதேச செயலகத்திற்கான கீதம் இறுவட்டு வடிவில் இசைப்பேழையாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.. அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இடம்பெற்ற கலாசார விழா நிகழ்வில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதேச செயலக கீதத்திற்கான இசை இறுவட்டினை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய பிரதம குரு மகாராஜஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் வெளியிட்டு வைக்க சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் பெற்றுக் கொண்டார்.

பிரதேச செயலக கீதத்திற்கான பாடல்வரிகளினை பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் பாட லினை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட் இசையினை கு.அற்புதன் ஆகியோர் வழங்கியுள்ளனர். (63)

## வெள்ளி நற்சிந்தனை...



# யாருக்கு யார் உறவு?

முன்னொரு காலத்தில் சித்திரகேது என்ற அரசன் இருந்தான். அவனுடைய ராணிகளைக் கணக்கிட முடியாது. ஆனால் அவனுக்குப் புத்திர பாக்கியமே ஏற்படவில்லை.

ஒரு சமயம் அவனுடைய சபைக்கு மகரிஷி அங்கிரஸ் வந்து சேர்ந்தார். அவர் புத்திரசோகத்தால் வாடிய அரசனைப் பார்த்துத் தாம் ஒரு வேள்வி செய்வதாகவும், அந்த வேள்வியின் பிரசாதத்தை மூத்த ராணிக்குக் கொடுப்பதாகவும், அவளுக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் சொன்னார். கூடவே அவர் ஓர் எச்சரிக்கையும் செய்தார். அரசனுடைய சுகத்திற்கும் துக்கத்திற்கும் அவனுக்குப் பிறக்கும் மகனே காரணமாக இருப்பான். என்றும் சொன்னார்.

மகரிஷி வேள்வியை முடித்து பிரசாதத்தை மூத்த ராணிக்குக் கொடுக்க, அவள் கர்ப்பவதியாகி விரைவில் ஓர் அழகிய மகனை ஈன்றெடுத்தாள்.

மகன் பிறந்த சந்தோஷத்தில் அரசன் சித்திரகேது மற்ற எல்லா ராணிகளையும் மறந்துவிட்டு, எப்பொழுது பார்த்தாலும் மூத்த ராணியின் மாளிகையிலேயே இருக்க ஆரம்பித்தான். இது காரணமாகக் கோபம் கொண்ட மகாராணிகளுக்கு அந்தக் குழந்தையின் மீது கோபம் ஏற்பட்டது. இந்தக் குழந்தையினால் தானே அரசன் நம்மைப் புறக்கணிக்கிறார்? ஆகவே இந்தக் குழந்தையை விடம் வைத்துக் கொன்று விட்டால் என்ன, என்று அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆலோசனை செய்தார்கள். ஒருநாள் அப்படியே செய்தும் விட்டார்கள். குழந்தை இறந்தது.

குழந்தை இறந்த செய்தி கேட்டு அரசன் வருந்தினான். பைத்தியம் பிடித்தவன் போல் அரசன் குழந்தையின் உடலையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அப்போது மகரிஷி அங்கிரசும், நாரத முனிவரும் அங்கே வந்தார்கள். துக்கத்தில் ஆழ்ந்திருந்த அரசனைப் பார்த்த அங்கிரஸ், அரசனே! நீ கடவுள் பக்தி கொண்டவன். ஆகவே கடவுளை அடையும் வழியை உனக்குச் சொல்லலாமென்று தான் முதல் தடவை உன் அரச சபைக்கு வந்தேன். ஆனால் நீயோ பிள்ளைவேண்டும் என்ற பைத்தியத்தில் இருந்தாய். ஆகவே நான் உனக்குப் புத்திரனை அளித்தேன். அது காரணமாக நீ இப்பொழுது துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாய். உலகமே இந்த மாதிரித்தான் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறது" என்றார்.

ஆனால் துன்பத்திலிருந்த அரசன் சித்திரகேதுவினால் அவரது வார்த்தைகளின் உட்கருத்தை அறிந்து கொள்ள முடியவில்லை.

அப்போது நாரதர் ஒரு காரியம் செய்தார். தம் தவ வலிமையினால் குழந்தையின் உடலிலிருந்து பிரிந்து சென்றுவிட்ட உயிரை திருப்ப வரவழைத்தார். அந்த உயிரைப் பார்த்து அவர் 'ஒ ஜீவாத்மாவே! இதோ பார்! உன்னுடைய அன்னையும், பிதாவும் மிக்க துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றார்கள். மீண்டும் இந்தச் சரீரத்தில் புகுந்து அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இராஜ யோகத்தையும் அனுபவி என்றார்.

உடனே ஜீவாத்மா அவரைப் பார்த்து 'தேவரிஷி! இவர்கள் எப்படி எனக்கு அன்னையும் பிதாவும் ஆவர்? உயிருக்கு அன்னையும் கிடையாது. பிதாவும் கிடையாது. எத்தனையோ பிறவிகள் நான் இவர்களுக்குப் பிதாவாக இருந்திருக்கின்றேன்: உறவினராக இருந்திருக்கின்றேன். அதே மாதிரி இவர்களும் எனக்கு இருந்திருக்கிறார்கள். சரீர சம்பந்தம் இருக்கும் வரையில் தான் இந்த உறவெல்லாம். அதற்குப் பிறகு அவரவர் கருமத்திற்கு ஏற்றாற் போல் செல்ல வேண்டியது தான்" என்று சொல்லி ஆத்மா சென்று விட்டது.

இதைக் கேட்டதும் சித்திரகேது மன்னனுக்கு ஞானம் பிறந்தது. நாரத முனிவர் செய்த உபதேசத்தைப் பற்றி அவன் இறைவனுடைய பாதார விந்தங்களை அடைந்தான்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

அது 1982 அல்லது 1983ஆக இருக்கலாம். நான் சிறுவன் – 13 வயதிருக்கும். அப்பா வேலை செய்யும் கம்பனியின் மெய்ன் கேட்டில் அப்பாவின் ஐடி எண்ணைச் சொன்னால், உள்ளே விட்டுவிடுவார்கள். சைக்கிள் மிதித்து உள்ளே செல்வேன். தார்ச்சாலை வழக்கும். ஓரமாய்ப் போய் உட்கார்ந்து பாலகுமாரன் வருவதற்கு காத்திருப்பேன். அவர் அப்போது ஸ்கூட்டரில் வருவார். சில நாட்கள் மட்டுமே அவர் செல்வதைப் பார்க்க முடியும். நிறுத்திப் பேசியதே இல்லை. அவரைப் பார்த்த மகிழ்ச்சியிலேயே திரும்பிவிடுவேன். அவர் மீது பித்து கொண்டிருந்த நாட்கள் அவை.

அவரை நேரில் சந்திக்க 1994ன் ஆரம்பத்தில் வாய்த்தது. போகும்போதே கையில் காஃப்காவின் விசாரணையை எடுத்துச் சென்று அவர் கண்ணில் படுமாறு வைத்திருந்தேன். நான் தீவிர இலக்கியங்களைப் படிப்பவன் என்பதை அவருக்கு உணர்த்த என்று இப்போது அதைப் புரிந்து கொள்கிறேன். அவர் மீதான ஈர்ப்பு சுத்தமாகக் காணாமற் போயிருந்தது.

அவர் மகள் பாடல்கள் பாடினார். பாலகுமாரன் சாமி வந்தது போல் ஏதேதோ செய்து என் கைகளைப் பிடித்தார். சந்னதம் முடிந்த பிறகு, என்னிடமிருந்து உங்களுக்கு ஏதாவது பாஸ் ஆச்சா எனக்கேட்டார். நான் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு, அந்த மாதிரி எல்லாம் ஒன்றுமில்லையே சார் என்றேன். ஷாக் மாதிரி வந்திருக்கணுமே என்றார். இல்லையே சார் என்றேன் மறுபடி. அவர் எவ்வளவு சொல்லியும், நான் மசிவதாகவே இல்லை.

அடுத்த நாள், என்னை அவரிடம் கூட்டிச் சென்ற நண்பரிடம், அவனை இனி கூட்டி வராதே, அவன் மோசமானவன் என்று சொல்லிவிட்டாராம்! அந்த நண்பருக்கும் இவர் யோகி ராம்சுரத்குமாரின் வாரிசு ஆகி, அவர் சொத்துகளை சுவீகரித்துக்கொள்ளக் காத்திருக்கிறார் என்ற புரிதல் உண்டு.

இப்போது எனக்கு பாலகுமாரன் எழுத்துகளின் மேல் பெரிய மதிப்பில்லை. சுஜாதாவையாவது மறுபடி படிக்க முடிகிறது. இவரை அதுவும் முடிவதில்லை [மேர்க்குரிப் பூக்கள் மட்டும் 6 வருடங்களுக்கு முன் இன்னொரு முறை படித்தேன்].

நிறைய பேரின் மேல் பைத்தியமாய் இருக்கிறோம். தமிழ்வாணன், பட்டுக்கோட்டை பிரபாகர், பாலகுமாரன், சுஜாதா, மேத்தா, வைரமுத்து எனப் பலர் மேல் நான் அந்தந்த காலகட்டத்தில் மிகப் பெரிய ஈடுபாட்டுடன் இருந்திருக்கிறேன். ஆனால், என்னை ஏமாற்றியவர் பாலகுமாரன் மட்டும்தான்.

தமிழ் இலக்கியத்திற்கு அவரது பங்களிப்பு என்ன? இதை யோசிக்கும்போது பல பெண்களை அவர் இலக்கியத்தின் பால் இழுத்து வந்திருக்கிறார் என்பதே என் முடிவாய் இருக்கும். அவர் அளவிற்கு பெண் வாசகர்கள் யாருக்கும் இருந்ததில்லை. அதில் பலர் அவரைத் தாண்டி இலக்கியம் படிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். **– ஜ்யோவ்ராம் சுந்தர்**

"கரையும் நினைவுகள்" சுயசரிதைத் தன்மைகொண்ட சிறுபுத்தகம்தான். ஆனால் அ.மார்க்ஸின் நீண்ட பயணத்தில் உடன் வந்த சாதாரண மனிதர்களிலிருந்து கரிச்சான் குஞ்சு, ஜெயகாந்தன் போன்ற எழுத்தாளர்கள் மட்டுமின்றி மார்க்ஸ் வளர்த்த செல்லப் பிராணிகள் நாய்க்குட்டிகள், முயல் குட்டிகளை குறிப்பாக அவரது அப்பா செல்லமாக வளர்த்த ஊர்வசி என்ற குரங்கை, மலை அணிலைப் பற்றியெல்லாம் மிக சுவாரசியமாக குறிப்பிட்டுள்ளார். பழம் கனிவதுபோல மனிதர்கள் ஒரு கட்டத்தில் கனியும்போது அவர்களது எழுத்தில் தெரியும் அந்த கனிவை வாசிப்பவர்களால் நெருக்கமாக உணரமுடியும்.

அ.மார்க்ஸின் கடுமையான உருவத்தையும், அவரது கட்டுரைகளையும், நூல்களையும் படித்துவிட்டு அவரைப் பற்றி கறாரான ராணுவத் தளபதி போன்ற பிம்பமொன்றுதான் இதுவரை என் மனதில் பதிந்திருந்தது. இப்போது அவரது உருவத்தைப் பார்த்தால் முதல் மரியாதை படத்தில் ஜன்னலோரமாக கூடுகட்டும் சிட்டுகுருவியை ரசித்தபடி கயிற்றுக்கட்டிலில் படுத்திருக்கும் சிவாஜி நினைவுக்கு வருகிறார்.

**புத்தகத்திலிருந்து சில வரிகள்......**

"உலகெங்கிலும் மக்கள் நேசிக்கத் தக்கவர்களாகவும், உதவி செய்பவர்களாகவும், அன்பின் வடிவங்களாகவும் இருப்பதை காணும்போது நம் மனம் எப்படி நனைந்து போகிறது. மற்றவர்கள் மீது நேசத்தைமட்டுமே கற்பிப்பதைத் தவிர கலைகளுக்கு வேறென்ன நோக்கம் இருக்க இயலும்..."

**– விநாயக முருகன்**

## அடையாள அட்டைக்கு 15 இற்கு முன் விண்ணப்பிக்குக

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெறவுள்ளது.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாதவர்கள் தேர்தலில் வாக்களிக்க முடியாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

எனவே தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பம் செய்ய முடியும் என தேசிய ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்திருந்தது.

தேர்தலுக்கு தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள விரும்புவோர் கால நேரத்திற்கு அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் சரத்குமார தெரிவித்துள்ளார்.


## சிவன் ஆலயத்தில் திருட்டு கைதானவர் விளக்கமறியலில்

புதுக்குடியிருப்பு சிவன் ஆலயத் திருட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நான்கு நபர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு சிவன் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நுழைந்தவர்கள் அங்கிருந்த நகைகளையும் பெருந்தொகைப் பணத்தையும் களவாடிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் முல்லைத்தீவுக் காட்டுப் பகுதியில் வீடொன்றில் தங்கியிருந்த நால்வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இவர்களிடம் இருந்து சிவன் கோவிலில் களவாடப்பட்ட நகைகளையும் பெருந்தொகைப் பணத்தையும் மீட்டனர். நேற்றுமுன்தினம் புதன்கிழமை இவர்களைக் கைது செய்த பொலிஸார் அன்றைய தினமே முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.



## பரமர் சங்கமம்

"புண்ணுக்கு வலியா மருந்துக்கு வலியா" எண்டொரு பழமொழி இருக்கெல்லே அதுபோலதான் சிலரது நடவடிக்கைகள் இருக்கு இந்த நாளேல ஆரைக் கேட்டாலும் உழைப் பில்லை; வருமானமில்லை எண்டதே வாய்பாடாப் போச்சு.

வர்த்தகரொருவர் சொன்னார் யுத்த காலத்திலும் இப்புடியில்லை அப்ப நல்லா உழைச்சம் எண்டு விளங்குதெல்லே அந்த நாளேல அவை வைச்சதுதானை விலை அப்ப நல்லா உழைச்சினமா நல்லாக் கொள்ளை அடிச்சினமா எண்டு நானுங்களுக்கு சொல்லத் தேவையில்லை.

2009 ஆம் ஆண்டுக்கு பின்பாக தென்பகுதி வர்த்தகர் எண்டில்லாமல் உழைப்பாளியளும் வந்து குவிஞ்சிட்டாங்கள். மேசன் தச்சனோ வேறை சிறுப்பிட்டியாக்களோ வந்ததாலை அப்ப வேலையளுக்குக் கூப்பிட்டால் செட்டுக் காட்டுறவை பாடு இப்ப காச்சல்தான்.

எண்டாப்போலை யாழ்ப்பாணத்தாற்றை செட்டுக் குறைஞ்சே போச்சு. அண்டைக்கு போன 4 ஆம் தேதி மனோகராச் சந்தியால திரும்பி நாவலர் றோட்டால வந்தன். வீதி நீட்டுக்கும் வாழை மரங்கள் கட்டி இருந்தது. அது பெருமாள் கோவில் ஒழுங்கேக்கை செத்த வீட்டிலை முடிஞ்சுது.

கட்டியிருந்த பனரில் கருணாகரன் தெய்வநாயகி எனப் போடப்பட்டிருந்தது. பிறகு இராசாவின் தோட்டம் வீதியாலை வரேக்க பறையடித்து செத்த வீடு நடந்தது அதலேம் பனர்கள் கட்டி அதே பேர்வழி காணப்பட்டது. என்ன பிரச்சனை எண்டு யோசிச்சுக் கொண்டு வந்திட்டன்.

அப்ப எனக்கொரு யோசினை ஒடிச்சு. 1980 களில் அது நடந்தது முத்தையா எண்டவர் குருநகரில் மகள் வீட்டில் காலமாகி பிரேதம் எடுக்கும் சமயம் மைச்சினன் மாருக்கை வந்த முரண்பாட்டால் பிரேதம் தூக்கப்பட்டு மகனொருவரின் வீட்டிலும் அதே செத்தவீடு அனுட்டிக்கப்பட்டது. அதேபோலதான் இதுவுமிருக்குமோ எண்ட யோசினேம் வந்து போச்சு இல்லாட்டி ஒரு செத்த வீடு இரு இடங்களில் நிகழ்வதெங்கனம். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருந்து வசதி படைச்சதுகள் எப்பில தப்பில இப்புடிப்பல இடங்களில் செய்திருக்கலாம் எண்டாலும் பரமருக்கு ஒரு டவுட்.

அண்டைய பேப்பரை எடுத்துத் துளாவினன் அப்பதான் இராசாவின் தோட்டத்தில் இருந்து கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச் செல்லும் உடல் அவேன்ரை பிறந்த வீட்டில் ஒரு மணி நேரம் வைத்து எடுத்துச் செல்லப்படுமெண்டு கிடந்தது.

மனோகராச் சந்தியில் இருந்து பெருமாள் கோவிலடி வரை வாழை கட்டி ஒண்டுக்கு ரெண்டு பனர்களும் கட்டி இங்கேயும் அதேமாதிரிச் செய்யிறேண்டா கொஞ்ச நஞ்சச் செலவே புடிக்கும். வருமானமில்லை உழைப் பில்லை எண்டலொக்கனத்தைப் பாத்தா மருந்துக்கு வலியா புண்ணுக்கு வலியா எண்டெல்லே எண்ணத் தோண்டுது சொல்லுங்க பாப்பம்..

# ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு போலி இணையத்தள செயற்பாடு

### தொடர்பாடல் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து போலி இணையத்தளங்களும் சமூக வலைத்தள கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் தொடர்பாடல் பிரிவுப் பணிப்பாளர் அதுல புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

சுமார் 5000 இற்கும் மேற்பட்ட போலி இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தள கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அனைத்து இணையத்தளங்களும், சமூக வலைத்தள கணக்குகளும் மூன்று வார காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை அடிப்படையாகக் கொணட போலி இணையத்தளங்களைப் போன்றே, பேஸ்புக் மற்றும் டுவிட்டர் ஆகிய சமூக வலைத்தள கணக்குகளும் ஆயிரக் கணக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செய்தி மூலங்களைக் குறிப்பிடாத செய்திகள், அவதூறு ஏற்படுத்தும் தகவல்கள் அடங்கிய செய்திகள் இந்தப் புதிய இணையத்தளங்களில் பரவலாக வெளியாகி வருகின்றன.

இவ்வாறான இணையத் தளங்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### உரிய நேரத்தில் வரி செலுத்தினால் கிடைக்கும் தங்கப் பதக்கம்



(கொழும்பு)

உரிய நேரத்தில், சரியாக வரி செலுத்துபவர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் வழங்குவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்த மாதம் சுமார் 500 பேருக்கு பதக்கங்கள் வழங்கப்படவுள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் வசந்தி மஞ்ச நாயக்க குறிப்பிட்டார்.

அத்துடன், எதிர்வரும் காலங்களில் சரியாக வரி செலுத்துபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சரியாக வரி செலுத்துபவர்களுக்கு வங்கிகளில் குறைந்த வட்டியுடன் கடன் வழங்குவதற்கும், சுங்கம் மற்றும் குடிவரவு திணைக்களத்தில் விசேட சலுகைகளை வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு, விசேட சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களின் விலைகளை மாற்றி விற்பனை செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.எ.டக்ளஸ் தெரிவித்தார்.

வருடாந்தம் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், தரமான பொருட்களை மக்கள் கொள்வனவு செய்வதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போதுள்ள அதிகாரிகளுடன், மேலும் 3 குழுக்களை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஈடுபடுத்தவுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இலங்கையின் அனைத்து பகுதிகளுக்கும் பொருட்களை விநியோகிக்கும் களஞ்சிய சாலைகள் வத்தளை மற்றும் ஒருகொடவத்த பகுதிகளிலேயே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து மாவட்டங்களிலும் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், 200 அதிகாரிகள் இதற்காக ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

# பிரசார பதாகைகளை அகற்ற 2000 ஊழியர்கள் களத்தில்



(கொழும்பு)

சட்டவிரோத சுவரொட்டிகள் உள்ளிட்ட பிரசார பதாகைகளை அகற்றுவதற்கு 2010 ஊழியர்களை ஈடுபடுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கு தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஊடாக சட்டவிரோத பிரசார பதாகைகளை அகற்றும் நடவடிக்கைக்கு ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் கூறினார்.

உலகிலுள்ள பல நாடுகளில் இவ்வாறு சட்டவிரோத பிரசாரங்களுக்காக நிதி ஒதுக்கப்படுவதில்லை என சுட்டிக்காட்டிய அவர், பொதுமக்களின் பணமே இதற்காக செலவிடப்படுவதாகவும் கூறினார்.


வாகனங்களுக்கான எரிபொருள், ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட விடயங்களுக்காக நிதி செலவிடப்படவுள்ளதுடன், பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் சட்டவிரோத பிரசார நடவடிக்கைகளை தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அஜித் ரோஹண கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, சட்டவிரோத சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளை அகற்றுவதற்கு 50 மில்லியன் ரூபா வரை செலவாகும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான பொறுப்பு பொலிஸ் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகளில் தேர்தல் விடயங்களுக்கு பொறுப்பான, இரண்டாயிரத்து 200 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகளை ஈடுபடுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிடுகின்றார். இந்த ஊழியர்களுக்கான சம்பளத்தை தேர்தல்கள் செயலகம் வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

சட்டவிரோத பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றும் நடவடிக்கையை அடுத்த வாரமளவில் நிறைவு செய்ய முடியும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார

30. 


இவ்விரு மின்சுற்றுக்களில்
1) A மட்டும் ஒளிரும்
2) B மட்டும் ஒளிரும்
3) A உம், B உம் ஒளிரும்

31. தென்னை மரம் ஒன்றில் எப்பொழுதும் இருப்பது
1) ஓலை 2) தேங்காய் 3) வேர்

32. தேவன் : - உனது வீடு எங்குள்ளது
பவானி :- எனது வீடு உனது மாமா வீட்டுக்கு அடுத்த தெருவில் உள்ளது

இவ்வுரையாடல் படி கூறக்கூடிய சரியான கூற்று
1) பவானியின் வீடு தேவனுக்கு தெரியும்
2) தேவனின் வீடு பவானிக்கு தெரியும்
3) தேவனின் மாமாவின் வீடு பவானிக்கு தெரியும்


❖ கீழ்வரும் வினாக்களுக்கு விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக

| | | | | |
|---|---|---|---|---|
| அமுதன் | - தோசை - 2 | வடை - 1 | தேனீர் - 1 | = 65.00 |
| டேவிட் | - தோசை - 3 | வடை - 1 | தேனீர் - 1 | = 85.00 |
| சுமன் | - தோசை - 2 | வடை - 2 | | = 70.00 |

33. தோசை ஒன்றின் விலை யாது? 1) 20.00 2) 15.00 3) 22.00

34. வடை ஒன்றின் விலை யாது? 1) 10.00 2) 18.00 3) 15.00

35. உருவில் உள்ள பொருட்களுடன் தொடர்புடைய செயல்கள் முறையே இடம்பெறும் விடையை தெரிக


1) வாசித்தல் - சீவுதல் - உரையாடல்
2) இசைத்தல் - வெட்டுதல் - பேசுதல்
3) ஊதுதல் - அறுத்தல் - கேட்டல்

36. அரசாங்க நிர்வாகத்தினால் வழங்கப்படும் சேவைதொடர்பான தகவலை அறிவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்?
1) 119 2) 1231 3) 118 4) 1919

37. தரப்பட்ட பிராணிகளுள் பூச்சி அல்லாத பிராணி எது?
1) சிலந்தி 2) கரப்பான் 3) எறும்பு 4) தும்பி

38. சிறுவர் அச்சுறுத்தல் பற்றிய முறையீட்டு தெரிவிப்பதற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
1) 1999 2) 1898 3) 1987 4) 1929

39. கையில் ஒட்டிய பலாக்காய் பாலை எளிதாக அகற்றப் பயன்படுத்தக்கூடிய பொருள்
1) தேங்காய் எண்ணெய் 2) வினாகிரி 3) பெற்றோல் 4) வெந்நீர்

கடந்த 10.12.2014 பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(1).3 (2).2 (3).2 (4).2 (5).2 (6).3 (7).3 (8).3 (9).1 (10).2 (11).1
(12).சதுரமுக (13)பி.ப.1மணி (14).2 (15).3 (16).2 (17).2 (18).1 (19).2 (20).A (21).C (22).1
(23)2. (24).3 (25).1 (26).2 (27).3 (28).2 (29).1 (30).3 (31).1 (32).1 (33).2
(34).குருதி,திறமை,மைவிழி (35). X (36).ஞாயிறு (37).20வயது (38).3 (39)1

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2014

பகுதி - I
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

1 தொடக்கம் 39 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

❖ கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

01 மனித வாழ்வில் மாறிமாறி வருவது
1) பசியும்,தாகமும் 2) இன்பமும்,துன்பமும் 3) சொத்தும், சுகமும்


02.

| | | |
|---|---|---|
| 9 | 2 | A |
| 4 | B | 8 |
| 5 | 10 | C |


நிரையாகவும், நிரலாகவும், குறுக்காகவும் கூட்டுகின்ற போது ஒரே கூட்டுத்தொகை வரக்கூடிய வகையில் A.B.C என்பவற்றுக்கு வரவேண்டிய இலக்கங்கள் முறையே
1) A - 6 - B - 5 C - 4 2) A - 7 B - 5 C - 4 3) A - 7 - B - 6 C - 3

03. ஒரு நகரத்தில் நூலகம் வைத்தியசாலையில் இருந்து 80m கிழக்கேயும், நீதிமன்றம் வைத்தியசாலையில் இருந்து 60m தெற்கேயும், பாடசாலை நீதிமன்றத்தில் இருந்து 80m கிழக்கேயும் உள்ளன. இதற்கு ஏற்ப நூலகம் இருப்பது பாடசாலையில் இருந்து
1) 60m வடக்கே 2) 80m தெற்கே 3) 60m மேற்கே

04. உரு A இலுள்ள தராசை பாருங்கள். அதில் இரு பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமனாகும்.




உரு B தராசில் இருப்பக்கங்களிலும் உள்ள நிறையை சமன் செய்வதற்கு நிறைகுறைந்த பக்கத்துக்கு சேர்க்க வேண்டிய உருக்களை தெரிக
1) △□ 2) □□ 3) ○○

05. 

இக்கடிகாரம் காட்டும் நேரத்திற்கு 45 நிமிடங்களுக்கு முந்திய நேரம் யாது?
1) 8 மணி 40 நிமிடம் 2) 10 மணி 10 நிமிடம் 3) 9 மணி 55 நிமிடம்

❖ 6ஆம், 7ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட மூன்று சொற்சோடிகளில் ஒன்று ஏனையவற்றில இருந்து வேறுபடுகிறது. வேறுபடும் விடையின் கீழ் கோடிடுக

06. 1) இறப்பர் - அகலவத்தை 2) தேயிலை - தலவாக்கலை 3) தென்னை - பல்லேகல

07. 1) தென்னை - வினாகிரி 2) முதிரை - எண்ணெய் 3) பனை - கருப்பட்டி

08 பின்வருவனவற்றில் எது உண்மையல்ல என தெரிந்து கோடிடுக.
1) இறைச்சி புரதம் அடங்கிய ஓர் உணவு
2) விற்றமின் C குறைபாட்டால் மாலைக்கண் நோய் ஏற்படும்
3) மண்ணெண்ணெயை விட நீர் அடர்த்தி கூடியது

09. பின்வருவனவற்றில் எது ஒருவருடைய அபிப்பிராயமாகும்
1) சோறு மாப்பொருள் அடங்கிய உணவாகும்
2) சோறு இலங்கையின் பிரதான உணவாகும்
3) சோறு சம்பலுடன் சுவையானது


❖முதலில் தரப்பட்ட உருக்கள் மூன்றுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ள உருவை தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து கோடிடுக

10. கலகல என்னும் சொல்லை முகம் பார்க்கும் கண்ணாடி முன் பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?

1) கலகல 2) லகலக 3) லகலக

11. மகளின் வயதைப்போல் 4 மடங்கு தாயின் வயது ஆகும். தாயை விட தந்தை 3 வயது கூடியவர். தந்தையின் வயது 51 வருடங்கள் எனின் மகளின் வயது யாது?
1) 12 வருடங்கள் 2) 14 வருடங்கள் 3) 9 வருடங்கள்

❖ஒவ்வொன்றும் ஒரு சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள 16 சதுரங்களை இவ்வுரு கொண்டுள்ளது



12. உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?
1) 12 2) 10 3) 14

13. நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு மொத்தப்பரப்பளவில் என்ன பின்னம்?
1) $\frac{5}{8}$ 2) $\frac{6}{12}$ 3) $\frac{3}{10}$

14.



இவ்வுருவில் உள்ள பிராணி பற்றி கூறக்கூடியது
1) குட்டியீன்று இனம்பெருக்கும்
2) முட்டையிட்டுகுஞ்சு பொரித்து பாலூட்டும்
3) இது ஓர் தாவர உண்ணி

15.



இவ்வீதி சமிக்ஞை குறிப்பது
1) முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்துக
2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துக
3) முன்னே வருக

❖16 ஆம், 17ஆம் வினாக்களில் உள்ள பழமொழிகளின் கருத்தினை தெரிந்து கோடிடுக

16. ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது
1) வெறும் புத்தகப்படிப்பு 2) விடாமுயற்சி 3) உலோபத்தனம் கூடாது

17. அழுதாலும் குழந்தையை அவளே பெற வேண்டும்
1) யாவருக்கும் தன்பொருள் பெரியதே
2) அவரவர் கடமைகளை அவர்களே செய்ய வேண்டும்
3) கோபம் சிந்தனைக்கு இடையூறு

❖தரப்பட்ட தகவல்களை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

ஒரு தேங்காயினதும் ஒரு தீப்பெட்டியினதும் விலை ரூபா 42 ஆகும். முட்டை ஒன்றினதும் யோகட் ஒன்றினதும் விலை ரூபா 36 ஆகும். முட்டை ஒன்றினதும் தீப்பெட்டி ஒன்றினதும் விலை ரூபா 21 ஆகும். இரண்டு தேங்காயினது விலை ரூபா 70 ஆகும்


18. யோகட் ஒன்றின் விலை யாது? 1) 22.00 2) 14.00 3) 18.00

19. நான்கு பொருட்களிலும் ஒன்று வீதம் வாங்கத்தேவையான பணம் யாது?
1) 86.00 2) 93.00 3) 78.00




❖அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றின் மீது ஒன்றாக வைக்கும் போது கிடைக்கும் உருவை தெரிவு செய்க

20.



1) 830 2) 680 3) 936

21.



1) TEA 2) ZOT 3) TOP


❖அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப செயற்படுக

| 6 | 4 | 9 | 3 | 2 | 5 | 8 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| மு | ய | வ | உ | த | கி | ப் | மை |

22. நான்முகி ஒன்றின் முகங்கள், உச்சிகள், விளிம்புகளின் கூட்டுத்தொகை 12 எனின் கட்டத்தில் உள்ள மெய்யெழுத்தின் மீது புள்ளடி (X) இடுக. கூட்டுத்தொகை 14 எனின் உயிர் எழுத்தின் மீது புள்ளடி (X) இடுக

23. நீரை விட இரசம் அடர்த்தி கூடியது எனின் கட்டத்தில் உள்ள இலக்கம் 7ஐ சுற்றி வட்டமிடுக. நீரை விட இரசம் அடர்த்தி குறைந்தது. எனின் இலக்கம் 5ஐ சுற்றி வட்டமிடுக.

24. அருகில் காட்டப்பட்ட கடதாசி நான்காக மடிக்கப்பட்டு வெட்டப்பட்டமுறை தரப்பட்டுள்ளது. இக்கடதாசியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் எது?



25. இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை தெரிந்து கோடிடுக
கணனியில் மையச்செயலகம் மனிதனின் .............. ஒப்பான பகுதியாகும்
1) உடலுக்கு 2) மூளைக்கு 3) ஆற்றலுக்கு

26. நிரமலா தவணை பரீட்சை ஒன்றில் 5 பாடங்களில் பெற்ற சராசரிப்புள்ளிகள் 72 ஆகும். அவள் 6 பாடங்களில் பெற்ற சராசரிப் புள்ளிகள் 75 ஆகும். அவள் ஆறாவது பாடத்தில் பெற்ற புள்ளி யாது?
1) 75புள்ளிகள் 2) 80புள்ளிகள் 3) 90புள்ளிகள்

27. ஒரு பையில் 4 நீல நிறப்பந்துக்களும் 6 மஞ்சள் நிறப்பந்துகளும் உள்ளன. ஒரு மஞ்சள் நிறப்பந்தினை கட்டாயமாக பெற்றுகொள்ள வேண்டுமாயின் பையில் இருந்து ஆகக்குறைந்த எண்ணிக்கையாக எத்தனை பந்துகளை வெளியே எடுக்க வேண்டும்?
1) 6 2) 5 3) 10

28. ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். 29ஆவது ஒலிம்பிக்போட்டி சீனாவில் 2008ஆம் ஆண்டு நடைபெற்றது. எனின் 33 ஆவது ஒலிம்பிக்போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெறும்
1) 2012 2) 2013 3) 2024

29.


| | | | |
|---|---|---|---|
| 6 | | 4 | = 2 |
| 3 | | 3 | = 9 |
| 5 | | 2 | = 7 |
| 12 | | 3 | = 4 |

புள்ளிக்கோடு இடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய குறியீடுகளை கொண்ட கட்டம் எது?

1) − + × ÷ 2) ÷ × − + 3) − × + ÷

# பெரும்போக வெங்காயச் செய்கை அடைமழையால் அழிவடைந்தது

## விவசாயிகள் கவலை



(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ். குடாநாட்டில் பெய்த அடை மழையின் காரணமாக வலி.வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் ஏக்கர் கணக்கில் பயிரிடப்பட்டிருந்த பெரும்போக வெங்காயச் செய்கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குப்பிளான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, வசாவிளான், உரும்பிராய், ஊரெழு, சுன்னாகம், தெல்லிப்பளை, கட்டுவன், அளவெட்டி, தரும்பசிட்டி ஆகிய பகுதிகள் உட்பட மேலும் பல இடங்களில் பயிரிடப்பட்டிருந்த வெங்காயச் செய்கையே இவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது

கடந்த வருடத்தை விடவும் இம்முறை அதிக விலை கொடுத்து விதை வெங்காயம் வாங்கித் தாம் நடுகை செய்த நிலையில் எதிர்வரும் மழை காரணமாகத் தாம் பெரும் நஷ்டத்தை எதிர் கொண்டுள்ளதாகவும், தாம் வெங்காயம் பயிரிடுவதற்கென வாங்கிய கடனை எவ்வாறு திருப்பிக் கொடுப்பதெனச் செய்வதறியாது திண்டாடுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் வருடம் சிறுபோகச் செய்கையின் போதும் மழை காரணமாகப் பெருமளவிலான வெங்காயச் செய்கை பாதிப்புக்குள்ளர்கியிருந்தது.

இந்த நிலையில் பெரும்போகச் செய்கையை நம்பியிருந்த தாம் மழையால் வஞ்சிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். தமக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுன்னாகம் எண்ணெய் கசிவு

## ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில், அப்பகுதி மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதியின் இந்து விவகாரங்களுக்கு பொறுப்பான ஆலோசகர் ராமச்சந்திர குருக்களுக்கும் (பாபு சர்மா) பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று, யாழிலுள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே பாதிக்கப்பட்ட மக்கள், தங்களுக்கு உரிய நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் எனக்கோரி மகஜரை பாபுசர்மாவிடம் கையளித்தனர். மகஜரை பெற்றுக்கொண்ட பாபு சர்மா, இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்து, விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

சுன்னாகம் மின்சார நிலையத்தின் மின்பிறப்பாக்கியிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவொயில், கிடங்கு வெட்டப்பட்டு நிலத்தில் ஊற்றப்பட்டமையால், அப்பகுதியை சூழவுள்ள கிணறுகளிலும் அயல் கிராமங்களான மல்லாகம், ஏழாலை, கட்டுவன், அளவெட்டி ஆகிய பகுதிகளிலுள்ள கிணறுகளிலும் எண்ணெய் கசிந்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பில தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி உட்பட பாதிக்கப்பட்ட 11 பேரும் தனித்தனியான வழக்குகளை நொர்தேன் பவர் நிறுவனம், மற்றும் உத்துரு ஜனனி திட்டம், ஆகியவற்றுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் பதிவு செய்து அது தொடர்பான வழக்கு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்து இளைஞர்களுக்கு ஏழு நாள் வதிவிடப்பயிற்சி

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை இந்து இளைஞர்களுக்கான ஒரு வார கால வதிவிடப் பண்புப் பயற்சி முகாமொன்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

கொக்குவில் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இப் பண்புப்பயிற்சி முகாம் நடைபெறும் என முகாம் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா தெரி வித்தார்.

14 வயதிற்கு மேற்பட்ட உடற் தகுதியுடைய இந்து ஆண்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும். 14 ஆம் திகதி மாலை பங்குபற்றுனர்கள் அனைவரும் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும். 07 தினங்கள் அங்கு தங்கியிருந்து இப்பயிற்சி முகாமில் ஈடுபட வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

பங்குபற்றுனர்கள் எட்டுமுழ வேட்டி, வெண்ணிற சேர்ட், அரைக்காற் சட்டை, ரீசேர்ட், விரிப்பு, போர்வை, தட்டு, டம்ளர், குறிப்புப் புத்தகம், பேனா போன்றவற்றைக் கொண்டு வர வேண்டும் என இந்து ஸவ்யம் சேவக சங்கத்தின் யாழ்.மாவட்ட துணைச் செயலாளர் ந.புகன்ஸ்ரீந்திரன் கேட்டுள்ளார்.

கலந்து கொள்ள விரும்புவர்கள் முன் கூட்டியே வரவினை பதிவு செய்து கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது

# முல்லை கேப்பாப்பிலவு கிராமத்தில் பொலிஸாரின் நடமாடும் சேவை

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு கிராமத்தில் விஷேட பொலிஸ் நடமாடும் சேவையொன்று இடம் பெற்று வருவதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம்.சாந்த திலகரட்ண தெரிவித்தார்.

வட பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் விஜேசிங்கவின் வழிகாட்டலின் கீழ் கடந்த மாதம் 23ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்ற குறித்த நடமாடும் சேவை இம் மாதம் 23ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காகவே இந்த நடமாடும் சேவை இடம்பெற்று வருகிறது.


இந்த நடமாடும் சேவையில் கேப்பாப்பிலவு கிராமத்தில் பகல் மற்றும் இரவு வேளைகளில் தொடர்ச்சியாக ஒரு மாதங்களாக இயங்குவதற்கென மாதிரி பொலிஸ் அரண் ஒன்றும் அமைக்கப்பட்டு அதன் மூலம் கிராமத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்களின் சிரமங்களை குறைக்கும் நோக்கிலேயே இவ்வாறு மாதிரி பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. முள்ளியவளை பொலிஸார் பகல் மற்றும் இரவு வேளைகளில் அந்தப்பகுதியில் கடமையிலும் ஈடுபடுகிறார்கள்.

மருத்துவ முகாம், சிரமதானம், விளையாட்டு உள்ளிட்ட பல செயற்பாடுகளிலும் பொலிஸார் ஈடுபட்டு வருவதாகவும், கேப்பாப்பிலவு பிரதேசத்தில் நடமாடும் சேவையை நிறைவு செய்த பின்னர் வற்றாப்பளை, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் ஆகிய பகுதிகளிலும் இவ்வாறு ஒரு மாத கால நடமாடும் சேவையை முன்னெடுககவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபாவனையை தடுப்போம்

## கோணாவிலில் விழிப்புணர்வு



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாட்களுக்கான செயற்றிட்டம் ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்டத்தின் கோணாவில் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலகம்,மாவட்ட செயலகத்துடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு வன்முறையை தூண்டும் மதுப்பாவனையை தடுப்போம் என்ற தொனிப்பொருளில் மக்களை விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்களும் இதன் போது வழங்கப்பட்டன.


## வாழ்க வளமுடன்

பெயர் :ச.அன்புக்கினியன்

முகவரி : இல.9 அன்புபுரம் முழங்காவில்

அகவை 10 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்துடன் புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்


# சிறப்புப்பட்டம் வழங்கி நிஜலிங்கம் கௌரவிப்பு



உலக சைவத் திருச் சபையால் யாழ்ப்பாணம் அச்செழு வடக்கைச் சேர்ந்த கதிர்காமன் நிஜலிங்கம் சமய ஜோதி எனும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தற்போது இந்துசமய அலுவலக உதவியாளராகக் கடமையாற்றி வரும் இவர் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொண்டு வரும் சைவத் தமிழ்ச் சமூகம் சார்ந்த சேவைகளைப் பாராட்டியே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

# தேர்தல் முறைப்பாடுகள் 87 என்கிறது "கபே"

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் 87 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கபே என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

இதில் 26 முறைப்பாடுகள் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பானவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுதப் பயன்பாடு தொடர்பில் இதுவரையில் எட்டு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் இதுவரையில் மொத்தமாக 53 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

CaFFE

ஆதரவாளர்களுக்கு இடையிலான மோதல்கள் தாக்குதல்கள் குறித்த சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாட்களில் மேலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறக் கூடுமென கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

## பனை அபிவிருத்திச் சபை

## PALMYRAH DEVELOPMENT BOARD
## REGISTRATION OF SUPPLIERS – 2015

Applications are here by invited from the Suppliers/ Agents/ Cooperative/ Public & Private Companies who wish to register themselves for the supply of under mentioned Goods & Services for the Year 2015.

**GOODS**

Item No

1) Stationery (All kinds of stationery including computer & typing paper, etc.)
2) Photocopy paper.
3) Toner (Computer, fax & Photocopy machines).
4) Office equipment (Calculator/ Adding machines, Duplicators & other office equipment).
5) Photocopy machines.
6) Computer & Computer accessories.
7) Steel office equipment.
8) Office furniture (wooden)
9) Materials for uniforms.
10) Electrical equipment.
11) Drinking water. Fooditems
12) Refrigerators/ Air conditioners.
13) All sizes of tyres & tubes & vehicle batteries.
14) Cushioning of vehicle seats (Upholstering).
15) Rubber seals, date stamps, plastic name boards.
16) Laboratory chemicals.
17) Laboratory equipments.
18) Laboratory furniture.
19) Laboratory glassware.

**SERVICE**

20) All kinds of printing (Letter heads, Posters & Others Printing work).
21) Repairs to all kinds of motor vehicles.
22) Servicing of all kinds of motor vehicles.
23) Repairs to & servicing of all kinds of office machines & equipment (Computers, Printers, Fax machines, Photocopy machines).
24) Repairs to and polishing of office furniture (wooden).
25) Vehicle air c conditioning.
26) Supply of vehicle on rent (cars, vans, cabs, jeeps)
27) Architectural planning, supply of natural flowers & consultancy services.
28) Trade stalls, construction, propaganda equipment, electricity supply for Trade Fairs & Exhibitions.
29) Digital screen printing and textile printing banners, flags.
30) Building construction work (up to 2.0 million).
31) Office partitioning.
32) Web site development, information Technology Solution & Service Provision.
33) Electrical equipment repairing & servicing.
34) Laundering.
35) Repairs to doors, windows & locks at the office.
36) Repairs to audio visual equipment.
37) Palmyrah based food production machineries & equipment.
38) Palmyrah fibre production machineries.
39) Handicraft tools & equipments.
40) Raw materials for Handicraft production.

**CONDITIONS**

1. Separate applications should be sent for each category of items requesting for registration indicating item number and the given description clearly (On one application, it is impossible to register for several categories of items)

2. Applications for registrations for Suppliers/ Services should be made on forms to be obtained on payment of as non – refundable fee of Rs. 1,000/- to the cashier of the Palmyrah Development board before 3:30 PM on any working day of the week. The duly completed application form should be submitted together with the receipt issued in respect for non-refundable fee of Rs. 1,000/-. Application form for registration will be issued from 12th December 2014 to 30th December 2014. Application for registration should be duly completed and sent by registered post to reach the Chairman, Palmyrah Development Board, 1st Floor, National Housing Secretariat, Kanady Road, Jaffna, on or before 31st December or may be deposited in the Tender Box at the Office. The envelope enclosing the application should be marked "**Registration of Suppliers – 2015**" on the top left – hand corner of the envelope.

3. Although quotation for suppliers/ services will be normally called from registered Suppliers. The Chairman, Palmyrah Development Board reserves the right to call quotations from other sources of suppliers as well.

4. Names of the suppliers who fail to submit quotations, when quotations are called for, or fail to make supplies in stipulated time period or which are not in conformity with samples or specifications and those who supply goods of inferior quality, will be struck off from the list of suppliers without prior notice.

5. Chaiman, Palmyrah Development Board reserves the right to reject applications for registration, without giving any reason whatsoever.

6. Credit facilities should be granted at least for one calendar month, for the clearance of bills, for the supply of goods & services.

**Chairman,**
**Palmyrah Development Board,**
**1st Floor, National Housing Secretariat,**
**Kandy Road, Jaffna.**

(C/3926)

# மகிந்தவுடனான பேச்சுக்கு மறுப்பு
# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு எப்படி?
## கேள்வி எழுப்பும் இல.கணேசன்



இலங்கை ஜனாதிபதியை சந்தித்துப் பேசுவதற்கு மறுப்புத் தெரிவித்துக் கொண்டே அவரிடமிருந்து இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வைக் கோருவது மருத்துவரிடம் செல்லாமல் நோயாளி தனக்கு சிகிச்சை அளிக்குமாறு கோருவதைப் போன்றது என பாரதிய ஜனதாக் கட்சியின் இல.கணேசன தெரிவித்தார். இந்திய மீனவர்களின் விவகாரத்திற்கு இலங்கை அரசாங்கத்துடன் பேசி நிரந்தரத் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்த அவர், இவ்வாறு நிரந்தர தீர்வைக்கண்ட பின்னர், பாரதிய ஜனதா நாடகமாடுவதாக தெரிவிப்பவர்கள் மௌனமாகி விடுவார்கள் என்றும் கூறினார். திருப்பதிக்கு இலங்கை ஜனாதிபதி செல்வதற்கு காட்டப்பட்ட எதிர்ப்பு குறித்தும் கருத்துத் தெரிவித்த அவர் ஒருவருடைய நம்பிக்கைகளை பின்பற்றுவதை தடுப்பது நீதியற்ற செயல் என்றார். இதேவேளை இலங்கை ஜனாதிபதி திருப்பதிக்கு சென்றபோது செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டமையையும் அவர்கண்டித்தார்.

# பலஸ்தீன அமைச்சர் அடித்துக்கொலை; இஸ்ரேல் இராணுவத்தின் கொடூர செயல்



பலஸ்தீன அமைச்சர் ஒருவரை இஸ்ரேல் இராணுவத்தினர் அடித்து கொன்றுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இஸ்ரேல்-பலஸ்தீனத்துக்கு இடைப்பட்ட மேற்குக்கரை பகுதியில் உள்ள துர்முசியா என்ற கிராமத்தில் நடைபெற்றுவரும் இரு நாட்டவர்களுக்கும் இடையேயான போராட்டத்தை பார்வையிட பலஸ்தீன அமைச்சர் ஜையாத் அபு (jayath abu) இன் அங்கு சென்றிருந்தார்.

அப்போது இஸ்ரேல் இராணுவ வீரர்கள் குறிப்பிட்ட பகுதிக்கு மேல் அவரை வரவிடாமல் தடுத்தனர்.

எனினும் அதையும் மீறி அப்பகுதிக்கு செல்ல முயன்ற அமைச்சரை இஸ்ரேல் இராணுவத்தினர் பிடித்து தள்ளி அடித்து உதைத்துள்ளனர்.

மேலும் துப்பாக்கியின் மறுமுனையால் அமைச்சரின் நெஞ்சில் குத்தியுள்ளனர். இதில் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிய நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அமைச்சர் போகும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் இருநாடுகளிடையே இருக்கும் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது

# தீவிரவாதிகளிடமிருந்து தப்பியவருக்கு பொதுச் சேவைக்கு உத்தரவு

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இருந்து தப்பிய சுவிஸ் இளைஞனுக்கு 600 மணி நேரங்கள் பொதுச்சேவை செய்ய வேண்டும் என்று தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சுவிஸ் நாட்டைச்சேர்ந்த 30 வயது இளைஞர் ஒருவர், கடந்த 2013ஆம் ஆண்டு தனது கல்வியை முடித்துக் கொண்டு, பிரான்ஸ் நாட்டிற்கு வேலைக்குச் சென்றுள்ளார்.

அங்கு, ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிவாதிகளுடன் கிடைத்த தொடர்பால், மூளைச்சலவை செய்யப்பட்ட இந்த நபர், அந்த இயக்கத்தில் இணைந்துள்ளார்.


பின்னர், ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் இவர் சந்தித்த கொடுமைகளால் அந்த இயக்கத்தில் இருந்து தப்பியுள்ளான்.

ஆனால், இவரை பிடித்த தீவிரவாதிகள், 3 மாதம் சிறையில் அடைத்துள்ளனர், சிறைத்தண்டனைக்கு பிறகு மீண்டும் தப்பி சுவிஸ் நாட்டு பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

மேலும், நான் அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்டேன் என்ற உண்மையைக் கூறி, தன்னை மன்னித்துவிடுமாறு கேட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கில், இவர் உண்மையை ஒத்துக் கொண்டதால், சிறைத்தண்டனை விதிக்காமல், 600 மணி நேரம் பொதுச்சேவை செய்ய வேண்டும் என்ற தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# கைலாஷ், மலாலாவுக்கு கிடைத்தது அமைதிக்கான நோபல் பரிசு



2014ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு, இந்தியாவின் கைலாஷ் சத்யார்த்தி, பாகிஸ்தானின் யூசுப்சாய் மலாலா ஆகியோருக்கு நேற்று முன்தினம் நோர்வேயில் வழங்கப்பட்டது. குழந்தைகளின் உரிமைக்காக கடந்த 35 ஆண்டு காலமாக பல்வேறு போராட்டங்களை நடாத்தி வரும் இந்தியாவின் கைலாஷ் சத்யார்த்தி, பெண கல்விக்கு குரல் கொடுத்ததால், தலிபான்களின் துப்பாக்கி சூட்டிற்கு ஆளாகி, மரணத்தின் விளிம்புக்குச் சென்று உயிர் பிழைத்த, பாகிஸ்தானின் மலாலா ஆகியோர், இந்த ஆண்டுக்கான அமைதிக்கான நோபல பரிசு பெறுபவர்களாக அறிவிக்கப்பட்டனர். இந்த நிலையில், நோர்வேயின் ஒஸ்லோவில் நடந்த பிரமாண்டமான விழாவில், அவர்கள் இருவருக்கும் நேற்று முன்தினம் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம் ஆகிய பிரிவுகளுக்கான விருதுகள் சுவீடனின் ஸ்டாக்ஹோம் நகரில் வழங்கப்பட்டன.

# வெற்றி கிடைப்பது நிச்சயம்
# அமைச்சர் ரட்ணாயக்கா நம்பிக்கை



இந்தத்தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியை மக்கள் உறுதி செய்துவிட்டார்கள். அந்த வெற்றியில் மலையக மக்களும் பங்காளிகளாக இருப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் தனியார் போக்குவரத்து துறை அமைச்சருமான சீ.பி.ரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட வலப்பனை தேர்தல் தொகுதிக்காக இராகலை நகரில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் காரியாலயத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் பேசுகையில்,

இன்று எமது நாட்டின் அபிவிருத்தியை பார்க்கின்றபொழுது எந்த ஒரு சக்தியாலும் ஜனாதிபதியை வெற்றி கொள்ள முடியாது. அந்த அபிவிருத்தி சமமாக மலையகத்திற்கும் வந்தடைந்துள்ளது. ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்த நாட்டில் போக்குவரத்து வசதிகள் சிறப்பாக இருக்க வேண்டும். கடந்த 10 வருடங்களில் அந்த அபிவிருத்தி சிறப்பாகவுள்ளது. அதுவும், மலையக மக்கள் நினைத்து பார்க்க முடியாத அளவில் அவர்களின் பாதைகளும் இன்னும் பல அபிவிருத்திகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இன்னும் இதனை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் ஜனாதிபதி வெற்றி பெற வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒரு குடையின் கீழ் நின்று, தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும்.

எமது நாடு சுதந்திரம் அடைந்த பின்பு அபிவிருத்தியில் பாரிய மைல்கல்களை எட்டியுள்ளது என்றால் அது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் இயங்கும் இந்த அரசாங்கத்தில்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. பல சர்வதேச நாடுகள் எமக்கு எதிராக செயற்பட்ட பொழுதிலும் அந்தச் சவால்களை முறியடித்து அபிவிருத்தி பாதையில் இந்த நாட்டை கொண்டு செல்லக்கூடிய அனைத்து திறமைகளும் மகிந்தவுக்கே உண்டு என அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், வலப்பனை தேர்தல் தொகுதி அமைப்பாளர் அபீத ரட்ணாயக்க, வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் துலங்க ஜயசூரிய உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வடமராட்சி கிழக்கில் புதிய மீன்சந்தைக்கட்டடம்
## அடிக்கல் நாட்டினார் சிறிரங்கேஸ்வரன்



வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் மீன் சந்தைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வைபவம் நேற்று முன்தினம் நாகர்கோவில் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச உறுப்பினர் முடியப்பு ஜோசப் ஜோன்சன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளருமான ஐயாத்துரை சிறி ரங்கேஸ்வரன் சந்தைக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

சுமார் 18 இலட்சம் ரூபா ஒதுக்கீட்டில் இச்சந்தைக் கட்டிடமும் கடற்றொழில் உபகரணங்கள் வைப்பகக் களஞ்சியமும் அமைக்கப்படவுள்ளது. சேவாலங்கா நிறுவனம் இச்செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இந்நிகழ்வில் சேவாலங்கா நிறுவன திட்ட முகாமையாளர் கண்ணன் கலந்து கொண்டார்.

### கீர்த்தி...

மைப்பின் தெஹிவளை அமைப்பாளரும் முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினருமான இவர் மேல்மாகாணசபை உறுப்பினராக தொடர்ச்சியாக மூன்று தடவைகள் இருந்ததாகவும் சுதந்திரக்கட்சியின் பிரபல ஆதரவாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கரணம்..

ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணையப்போகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதை விரும்பாததன் காரணமாகவே தான் ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து விலகுகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை உதய கம்மன்பிலவின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் தீர்மானிப்பார்கள் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கம்மன்பில எடுத்த தீர்மானம் தம்மையோ கட்சியையோ பாதிக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் ஓர் அரசியல்வாதி என்ற காரணத்தினால் அவரது அரசியல் வாழ்க்கைக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன் என ரணவக்க தெரிவித்துள்ளார்.

### மனித...

உள்ளடங்கியிருப்பது பெருமைக்குரிய விடயம் என ஜனாதிபதி சட்டத்தரணி- கலநிதி வெதகே தந்தருத்ரிகு தெரிவித்தார்.

நேற்று மாலை அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்- இலங்கையில் குற்றங்கள் குறைந்து செல்கின்றமைக்கு பொலிஸாரின் திறமை- பங்களிப்பு என்பன பிரதான காரணம்.

அத்துடன் நாட்டில் பின்பற்றப்படும் சமயங்களும் பிரதான இடம் வகிக்கின்றன. உலகின் பிரதான சமயங்களான பௌத்தம்- இந்து- கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய நான்கு மதங்கள் இலங்கையில் பின்பற்றப்படுகின்றன. சமயத்தை மிக ஆழமாக பின்பற்றி வரும் சமூகம் என்பதால்தான் எமது நாட்டில் குற்றங்கள் குறைகின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளான அமெரிக்கா- பிரித்தானியா- அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் குற்றங்கள் மிகவும் குறைவடைந்துள்ளன. இதற்கு பொலிஸாரின் திறமையே பிரதான காரணம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பொருத்தமான...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இளைஞர் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொய்யான தமிழ்த் தேசியவாதிகளால் எமது மக்களுக்கு ஒருபோதும் நன்மைகளோ பயன்களோ ஏற்படப்போவதில்லை.

அதுமட்டுமன்றி அவர்கள் எமது மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுப்பதற்கு அக்கறை கொண்டவர்களாகவோ விருப்பம் கொண்டவர்களாகவோ இல்லையென்பதே யதார்த்தமாகும்.

வெறும் உணர்ச்சிப் பேச்சுகளும், உசுப்பேற்றல்களாலும் எமது மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்க முடியாது. மாறாக இணக்க அரசியலும் அரசுடனான நல்லுறவும் வைத்துக் கொள்பவர்களால் மட்டுமே அபிவிருத்திகளையும் மக்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுக்கான செயற்திட்டங்களையும் முன்னெடுக்க முடியும். அதையே நாம், நீண்டகாலமாக எமது மக்களின் நலன்சார்ந்து முன்னெடுத்து வருகின்றோம்.

அந்தவகையில் எமது மக்களின் கௌரவமான ஒளிமயமான எதிர்காலத்திற்கு நாம் எடுத்துக் கொண்ட அரசியல் நிலைப்பாடும் கொள்கை பற்றுதியும் மிக முக்கியமானவை என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சமூக மேம்பாட்டைக் கருதியதாக இளைய சமூகத்தினர் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகுமென்றும் தெரிவித்தார்.

# ஊரத்தி மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிப்பு

அராலி ஊரத்தி மக்களாகிய நீங்கள் எமக்கு கோரிக்கை விடுத்து மூன்று வருடங்களுக்கு பின்னர் உங்களுக்கு காணி வழங்க வந்துள்ளோம்.

முதற்கட்டமாக 37 குடும்பங்களில் 20 குடும்பங்களுக்கு சபையின் காணியை பகிர்ந்து வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள் என வலி. மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் வலிகாமம் இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன (ஜீவன்) தெரிவித்தார்.

அராலி ஊரத்தியில் குடியிருக்கும் மக்களுக்கு காணிபங்கீடு குறித்த இறுதிக்கட்ட நகர்வு நேற்று சபை தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித்தலைவர் சி. பாலகிருஸ்ணன் மேலும் கூறுகையில்:

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இக்காணிகளில் நீங்கள் வாழ்ந்து வருகின்றீர்கள்.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் சங்கானை தெற்கில் உள்ள 23 குடும்பங்களுக்கு காணி பகிர்ந்து வழங்கியுள்ளோம்.

இதேபோன்று இன்றும் காணி பகிர்ந்து வழங்க முன்வந்துள்ளோம்

எனவே 37, காணித்துண்டங்களில் பிரதேச சபைக்கான சில துண்டங்கள் போக மீதியாகவுள்ள துண்டங்களில் 20 குடும்பங்களுக்கு முதற்கட்ட பதிவுகள் மேற்கொண்டுள்ளோம்.

எனவே ஊரத்தி மக்களாகிய நீங்கள் இச்செயற்திட்டத்திற்கு பொறுமையுடன் பங்களித்து உதவுங்கள் இங்குள்ள அனைவருக்கும் காணி உறுதி கிடைக்க வழிவகை செய்வேன் என்றார்.

இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்களான க.ஜயலிங்கம், க.சபாநாயகம், ரி.சசிதரன், செ.செல்வக்குமார், ந.பி.இராஜ்குமார் மற்றும் பிரதேசசபை அலுவலர்கள் கலந்து கொண்டனர். (92)

### வடக்கின்...

மைகள் பற்றி பார்க்க வேண்டும். எந்த அடிப்படையில் நாம் உண்மையான நன்மைகளைப் பெறலாம் என பார்த்தால் அது அரசியல் ரீதியாகத் தான் தீர்வு காணமுடியுமாக அமைகின்றது. ஆனால் வழக்குகள் பதியப்படுவதில்லை. என்றார். (இ)

### செங்கோலுக்கு..

பதாகக் கூறி சபையின் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி அவைத் தலைவர் எடுத்துக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து சபையில் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இறுதியாக செங்கோல் தட்டி வீழ்த்தி உடைக்கப்பட்ட விடயம் சபையின் வாதப் பிரதி வாதத்திற்கு உள்ளாகியது. கடந்த கூட்டத்தில் செங்கோல் தட்டி வீழ்த்தி உடைக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக சபை முதல்வர் தனது கவலையை வெளியிட்டதுடன் சபையின் உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் எதிர்க் கட்சித்தலைவர் உட்படபலர் தமது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினர்.

இதன்போது உரையாற்றிய வட மாகாண சபையின் எதிர்க் கட்சித்தலைவர் சி.தவராசா,செங்கோல் என்பது பாரம்பரிய பெறுமதி உடைய பொருள். அதனை யாரும் அவமரியாதை செய்வதையோ அன்றி பறிப்பதையோ, உடைப்பதையோ அங்கீகரிக்க முடியாது. ஆகையினால் எதிர்காலத்திலும் எவரும் இத்தகையதொரு செயல்பாட்டை மேற்கொள்ளாது இருக்கும் வகையில் உறுப்பினரான சிவாஜிலிங்கத்துக்கு அவைத் தலைவர் தண்டனை வழங்க வேண்டும் என வாதிட்டார்.

இந்நிலையில் சபை முதல்வர் சாதுரியமாக கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர், சிவாஜிலிங்கம் நடந்து முடிந்த சம்பவத்திற்கு சபையில் கவலை வெளியிடுவதுடன் செங்கோல் திருத்துவதற்கான பணத்தை செலுத்தும்படியும் இல்லாதுவிட்டால் தான் அதனைச் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான சயந்தன், அன்ரன் ஜெகநாதன், விந்தன் கனகரத்தினம் ஆகியோர் தமது கருத்துக்களை முன்வைத்தனர். எதிர்கட்சியின் உறுப்பினர்களான தர்மபாலா ஜெயத்திலகா ஆகியோரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். முதலமைச்சரும் கூட நடந்த சம்பவம் சம்பந்தமாக கருத்துக் கூறினார்.

இந்த நிலையில் சபையில் குழப்பமான நிலைமை ஏற்பட்டதைத் தொடர்ந்து அவைத் தலைவர் சற்று ஆக்ரோஷமாக சபையில் ஒழுங்கு நடவடிக்கை இறுக்கமாக பின்பற்றப்பட வேண்டும் எனக் கூறி சபையை அமைதியான நிலைக்குக் கொண்டுவந்தார்.

இந்த நிலையில் தனது ஆசனத்தில் இருந்து எழுந்த சிவாஜிலிங்கம் மேற்படி சம்பவத்திற்கு தான் மன்னிப்புக்கோர மாட்டேன் எனவும் செங்கோல் திருத்துவதற்கு பணத்தைக் கட்டமுடியாது என்றும் இதற்காக தான் பதவியை இழந்தாலும் பரவாயில்லையென்று கூறி தவிசாளரின் வேண்டுதலை ஏற்கமறுத்துவிட்டார். இந்த நிலையில் சபை அமர்வை இத்துடன் நிறைவு செய்வதாகக் கூறி அவைத் தலைவர் நேற்றைய சபையை ஒத்திவைத்தார்.

# வீதிகளை புனரமைக்க உதயன் எம்.பி. அனுமதி



(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடான நகர எழுச்சி (புறநெகும) திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்காக சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பொன்னம்பலம் வீதி மற்றும் சிவகுரு வீதி, சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட சரசாலை மத்தி சனசமூக நிலைய வீதி, நாவற்குழி பாடசாலைவீதி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கரணவாய் கிழக்கு கலட்டிவீதி, கரணவாய் மேற்கு பாடசாலைவீதி, நெல்லியடி வடக்கு இரும்பு மதவடி, ஆலங்கட்டை இணைப்பு வீதி ஆகியவையும் வலிகாமம் கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட வாதரவத்தை அத்திராணை வீதி ஆகிய வீதிகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நகர எழுச்சித்திட்டத்தின் (புறநெகும) கீழ் புனரமைப்பதற்கு ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் கிழக்கு பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) புனரமைப்பதற்கு உரிய அனுமதியினை நேற்று வழங்கி வைத்தார்.

இவற்றுடன் வலிகாமம் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள இடைக்காடு அக்கரை கிராம அலுவலர் பிரிவிலுள்ள 35 வறிய குடும்பங்களிற்கு சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் (SDC) நிதியுதவியுடன் வீட்டுத்திட்டம் வழங்குவதற்கும் உரிய அனுமதியினை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் வழங்கி வைத்தார்.

# சந்திரிக்கா தலைமையில் நேற்று மந்திராலோசனை


எதிர்க்கட்சிகளின் முக்கிய தலைவர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வீட்டில் நேற்று விசேட கூட்டமொன்றை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சி களின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, மங்கள சமரவீர உள்ளிட்டவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா 2010 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட போது ஏற்பட்ட பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சி உறுப்பினர்களை எதிர்க்கட்சியில் இணைத்துக் கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# எங்களின் பக்கம் ரணிலையும் இழுப்போம்



நாங்கள் நினைத்தால் ரணிலையும் எங்கள் பக்கம் எடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று மாலை அநுராதபுரத்தில் நடைபெற்ற முதலாவது பிரசாரக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், நீங்கள் எங்கள் செயலாளரை எடுத்தால் நாங்களும் உங்கள் செயலாளரை எடுப்போம்.

திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. இரண்டு பேரும் உட்கார்ந்து கோப்பி ஒன்றுதான் குடித்தோம். நாங்கள் நினைத்தால் ரணிலையும் எங்கள் பக்கம் எடுக்க முடியும். ஒரு கோப்பை தேனீர் கொடுத்தால் ரணிலும் எங்களோடு இணைந்து விடுவார்.

எங்களுடைய இராணுவம் ஒரு நாளும் பொது மக்களை கொலை செய்யவில்லை. மக்கள் என்னிடம் யுத்தத்தை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டனர். அவர்களுக்காக நான் யுத்தத்தை நிறுத்தினேன். அதன் பின்பு நாட்டை அபிவிருத்தி செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். அதனையும் நான் நிறைவேற்றினேன். மேலும் என் கையில் இரத்தம் படியவில்லை படிந்தால் கையை வெட்டி வீசி விடுவேன். இம்முறை நான் ஜனாதிபதியான பின்பு அநுராதபுர மக்களுக்கு சுத்தமான குழாய் நீர் வழங்குவதே எனது திட்டமாகும். எதிர்வரும் காலத்தில் நாட்டினை ஒற்றுமை யான பாதையில் கொண்டு செல்வதே எனது நோக்கமாகும் அனைவரும் பொறுமையாக இருந்து இந்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றியினை பாருங்கள் என்று தெரிவித்தார்.

# வடக்கு ஊடகவியலாளர்களுக்கு முதன் முறையாக கிடைத்தது உதவி

## ஊடகவியலாளர் திருலோகமூர்த்தி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் முதன் முறையாக ஊடகவியலாளர்களின் நிலைமைகளை கருத்தில் எடுத்து அவர்களின் தொழில் மேம்பாட்டிற்காக உதவியை வழங்கியவர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரே என மூத்த ஊடகவியலாளரும், கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கத்தின் போசகருமான மருத்துவர் திருலோகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பத்து ஊடகவியலாளர்களுக்கு மடிக்கணனிகள் மற்றும் புகைப்பட கருவிகள் என்பவற்றை வழங்கி வைக்கும் நிகழ்விற்கு தலைமை தாங்கி கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்களைப் பொறுத்த வரை ஒரு மகிழ்ச்சியான நாள். கிளிநொச்சி மாவட்டத்தின் ஊடகவியலாளர் சங்கத்தினர் நாடாளுமன்ற உறுப்பினரை அணுகி கோரிக்கை விடுத்த போது அவர் உடனடியாகவே கோரிக்கையை ஏற்று இந்த பணியை மேற்கொண்டுள்ளார். தென்னிலங்கையில் கூட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடகவியலாளர்களுக்கு இப்படியொரு வாழ்வாதார உதவிகளை வழங்கியி ருக்க மாட்டார்கள். எனவே இது ஒரு முன்மாதிரியான நிகழ்வு. இதனை நாங்கள் வரவேற்கி றோம். எங்களுடைய சங்கத்தில் 17 பேர் அளவில் உள்ளனர். எனவே ஏனையவர்களுக்கும் இவ்வாறு உதவிகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள் வதோடு, எங்கள் மாவட்ட ஊடகவியலாளர்களை பொறுத்த வரை யுத்தம் மற்றும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள் எவரும் வசதியானவர்கள் அல்ல அவ்வாறான நிலையில் இந்த உதவிகள் அவர்களின் தொழில் நடவடிக்கையினை மேலும் மேம்படுத்தும் எனக்குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் 50 ஆயிரம் ரூபா நிதி பங்களிப்புடனும் ஊடகவியலாளர்களின் பங்களிப்புடனும் ஊடகவியலாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதி தவிசாளருமான முருகேசு சந்திரகுமார், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் மனோகரன், கரைச்சி பிரதேச செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் அமல்ராஜ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஒன்றுகூடல் நிகழ்வு

சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினத்தினை முன்னிட்டு கொக்குவில் பெதஸ்டா நிறுவனம் வடமாகாண மாற்று வலுவுள்ளோர் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம், A.O.G. சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண இந்தியத் தூதுவராலயத்தின் பிரதித் துணைத் தூதுவர் எஸ்.ரி. மூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (137)






இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.